# செந்தமிழ்



தொகுதி - 72 வள்ளுவராண்டு 2008 ஜூன் 1978 பகுதி - 2


| கட்டுரை எண். | உள்ளுறை | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | ஓர் அரசன் ஒரு வள்ளல்<br>வே. ச. திருமாவளவன், M.A.,M.O.L.,B.Ed., | 1 |
| 2 | கம்பன் பாட்டு<br>பா. கங்கா பரமேஸ்வரன், M.A., | 6 |
| 3 | கற்பனை வளத்தில் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை<br>டாக்டர் ஏ.என். பெருமாள், M.A.,P.HD., | 10 |
| 4 | அந்திமாலை - சிலம்புச் சிந்தனை<br>ஆ.செ. சச்சிதானந்த நாராயணன் | 19 |
| 5 | தமிழுக்கு மாற்றம் தேவையா?<br>ந. நடராச பிள்ளை, M.A., | 23 |
| 6 | மேனாட்டு நாகரிகமும் இந்திய நாகரிகமும்<br>கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் | 29 |
| 7 | தும்பைத்திணை<br>டாக்டர் நா. செயராமன், M.A.,P.HD., | 34 |
| 8 | மதிப்புரை | 40 |
| 9 | செய்திக் கதிர் | 42 |

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

பேராசிரியர் டாக்டர். சுப. அண்ணாமலை, எம்.ஏ., பி.எச்டி.,
முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை-9.

பேராசிரியர் டாக்டர். கோ. விஜயவேணுகோபால், எம்.ஏ., பி.எச்டி.,
மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை – 2.

பேராசிரியர் பழநி. அரங்கசாமி, எம்.ஏ., பி.ஓ.எல்.,
அஞ்சல்வழிக் கல்வித்துறை, மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை-21.

உரையாசிரியர் புலவர். இரா. இளங்குமரன்
தமிழாசிரியர், மு.மு. உயர்நிலைப்பள்ளி, திருநகர், மதுரை-6.

ஆசிரியரும் வெளியிடுபவரும்:

டி.பி.எம். பெரியசுவாமி, எம்.எல்.ஏ.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 625 001.

---

செந்தமிழ்

ஆண்டுச் சந்தா ரூ. 5-00

# முன்னுரை

இலக்கிய இலக்கணத் தொண்டினை இடையருது நடாத்தி வரும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 'செந்தமிழ்' தவிர்க்க இயலாத சில இடையூறுகளால், தடைப்பட்டு நின்றமையைத் தமிழ் உலகம் நன்கு அறியும். இப்பங்குனித் திங்கள் தொடங்கி மூன்று திங்களுக்கு ஒருமுறை வழக்கம்போல் 'செந்தமிழ்' தமிழ் அன்பர்களின கையில் தவழும் என்பது உறுதி. இந்த இதழினைத் திங்களுக்கு ஒரு முறையாக வெளியிட வேண்டுமென்பது எமது பேராவல். தமிழாசிரியப் பெருமக்களும், இலக்கிய நண்பர்களும், பொது மக்களும், மாணவ அன்பர்களும், தாம் இவ் இதழினைப் பெறுவ தோடு, நண்பர்களையும் பெறுமாறு தூண்டிச் 'செந்தமிழ்' பல்கிப் பெருகுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கிட வேண்டும்.

''வெளியிடப்படுகின்ற கட்டுரைகளில் மொழிஇயல்பற்றி யனவே மிகுதியும் இருக்கக் காண்கிறோம்; இலக்கிய இலக்கணக் கட்டுரைகளுக்கே முதலிடம் அளிக்க வேண்டும்'' என்று பலர் நேரிலும், கடிதங்களிலும் கூறி வருகின்றனர். நுணுகி ஆராய்ந்து எழுதப்பட்ட மொழி இயல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அதற்கென்று வெளிவரும் மொழிஇயல் இதழ்களில் வெளியிடுவதே நலம் என்று நாமும் கருதுகின்றோம். இனிவரும் இதழ்களில் இலக்கிய, இலக்கணக் கட்டுரைகளுக்கும், கவிதைகளுக்கும் முதலிடம் அளிக்கப்பெறும்.

'செந்தமிழி'ன் சுவை குன்றாவண்ணம் சீரிய தமிழ்க்கவிதை களும் இடம்பெறல் வேண்டும். இயற்கையின்எழில், அன்பு, பண்பு, அறம், மறம், பொறை, ஈகை, இரக்கம், கருணை ஆகியவை பற்றிய மரபுவழிக் கவிதைகளையும், ஒப்பிலக்கியக் கட்டுரைகளை யும் அனுப்ப வேண்டுகிறோம்.

புதியனவாக வெளியிடப்படும் நூல்களைப் பற்றிய மதிப்புரை தொடர்ந்து இடம்பெறும். புத்தக வெளியீட்டாளர்களும், நூலா சிரியர்களும், மதிப்புரைக்கு நூல்களை அனுப்பிச் செந்தமிழோடு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். 'செந்தமிழி'ன் வளர்ச்சிக்கும் தொண்டுக்கும் உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், அன்புமொழி பகர்ந்தும், அருளுரை வழங்கியும் செந்தமிழ் நீடு நிலைத்து, நின்று பணி புரிய ஒல்லும் வகையான் உதவிட வேண்டு கிறோம்.

'குற்றம் களைந்து குறைநீக்கி வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்'

# ஓர் அரசன் ஒரு வள்ளல்

வே. ச. திருமாவளவன் M.A., M.O.L., B.Ed.

''மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலும் உடைத்தே''

என்னுமாறு ஏறுபோல் பீடுநடையும் ஏக்கழுத்தும் கொண்டு புலவர்கள் வாழ்ந்த காலமொன்று தமிழகத்தில் நிலவியது. அதனைச் சங்ககாலம் என்பர் அறிஞர். அக்காலம் புலவர்க்குப் பொற் காலம்; புரவலர்க்கு நற்காலம். ''அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்'' ''அறநெறி முதற்றே அரசின் கொற்றம்''-இக்கொள் கைகள் வாழ்ந்த சமுதாயத்தில் புலவர்க்கு மதிப்பும் புரவலர்க்குப் புகழும் கிடைத்ததில் வியப்பில்லை. புலவர்களைப் போற்றிய மன்னர்களில் பலர் புலமையாளர்களாகவும் திகழ்ந்தனர். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், பாண்டியன் அறிவுடை நம்பி, பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பன்னாடு தந்த பாண்டி யன் மாறன் வழுதி, கோப்பெருஞ்சோழன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி, தொண்டைமான் இளந்திரையன், சேரமான் கணைக்கால் இரும்பொறை, சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை ஆகியோர் நாடு புரக்கும் மன்னராயும் அறிவறி புலவராயும் விளங்கினர்.

அக்காலப் புலவர்கள்,

''வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவல்'' என்றும்,

''பீடில் மன்னர் புகழ்ச்சி வேண்டி
எய்யாக் கூறிக் கிளத்தல்
செய்யா தாகின்றுஎம் சிறுசெந் நாவே''

என்றும் கூறப்படுகின்றவற்றை உயிர்க் கொள்கையாகவே கொண் டொழுகியவர்கள். இங்ஙனம் ஒழுகிய புலமைவளம் பொருந்திய புலவர்கள் உளமலி உவகை கொண்டு மன்னர்களையும் மாத் தமிழ்ச் செல்வர்களையும் பாராட்டிய இடங்கள் பல சங்க இலக்கியங்களில் பல்கியுள்ளன. அக்காலப் புலவர்கள் நாட்டு மக்களின் உணர்ச்சி

நரம்புகளை முறுக்கேற்றிப் போர்க்கள வேள்வியில் தங்களை ஆகுதிகளாக இட்டுக் கொள்ளச் செய்துவிட்டனர். அதே சமயத்தில் உளக் காழ்ப்பும் காய்வும் இன்றிப் புலவர்கள் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. பாரியின் நண்பராம் கபிலரைப் பொருந்தில் இளங்கீரனர்

''செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலர்''

என்றும், நக்கீரர்

''உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன்''

என்றும், மாறோகத்து நப்பசலையார்,

''புலனழுக் கற்ற அந்த ணாளன்''

என்றும்,

''பொய்யா நாவிற் கபிலன்''

என்றும் இசைத்துள்ளனர். ஔவைப் பெருமாட்டி, அதிகமான் நெடுமான் அஞ்சியைப் பாராட்டும்போது, அவன் பரணரால் பாராட்டப்பட்டமையை,

''அன்றும் பாடுநர்க் கரியை இன்றும்
பரணன் பாடினன் மற்கொல்''

என்று போற்றுகின்றார். இங்ஙனம் சொல்லேர் உழவர்களால் பொருள் சேர் புகழ்பெற்ற கபிலர்பெருமான், கழாத்தலையார் என்னும் புலவரைப் 'புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலை' என்று இசைபொதி மொழிகளால் பாராட்டுகின்றார்.

புலவர்கள் புலவர்களைப் பாராட்டியதைப் போன்று, மன்னர்களும் புலவர்களைப் போற்றினர்கள் சான்றாக, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் மொழிந்த போது,

''ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'' என்று தன்
தண்டமிழ் ஆசான் மாங்குடி மருதனாரைக் குறித்துள்ளமை

அறியற்பாற்றும்.

புலவர்களைப் பாராட்டிய புலவர்களையும், மன்னர்களையும் எண்ணும்போது வள்ளல்களைப் பாடிய மன்னர்கள் உண்டோ என்ற வினவும் எழுகிறது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஒரு புலவனும் ஆவான். கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார், ஆவூர் மூலங்கிழார் முதலிய அருந்தமிழ்ப் புலவர்களின் செஞ்சொல்மாலை பூண்டவன் அவன். ஆலத்தூர்கிழார் கூறுமாப் போல் "காலையும் மாலையுமாகிய இரு போதும் புரு முட்டையன்ன வரகினைப் பால் பெய்து சமைத்துத் தேனுடன் கலந்து, அதனோடு முயலின் கொடுஞ் சூட்டிறைச்சியைத் தின்ற என் சுற்றத்தொடு இலந்தை ஓங்கிய மன்றத்தின்கண் கரப்பில் உள்ளத்தோடு வேண்டிய மொழிகளைப் பலகாலும் கூறி அமலைக் கொழுஞ்சோற்றினை உண்ட பாணர்க்கு அகலாச் செல்வமெல்லாம் அள்ளிக் கொடுத்தவன்.

அத்தகு சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் சோணாட்டை ஆண்ட காலத்தில் சிறுகுடி என்னும் ஊரில் பண்ணன் என்னும் வள்ளல் வாழ்ந்து வந்தான்; புலவர் பாடும் புகழுடையோன் அவன். சிறுகுடிகிழான் பண்ணனைக் கிள்ளிவளவனே யன்றிக் கோவூர்கிழாரும் மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனாரும் பாடியுள்ளார். ஈண்டு வள்ளல்களைப் பற்றி நாடாண்ட மன்னர்கள் பாடியுள்ளது தெளிவாகிறது.

பிறிதோர் காட்சி: ஒருகால் சோழ நாட்டில் பஞ்சம் புகுந்தது. நீர் அரு நெடுங்கழனிகள் நீறுபூத்தன. பசி புசித்துப் பசி ஆறிற்று. மக்கள் செல்லிடம் காணாது செல்லல் உற்றனர். பாணரும் பொருநரும் விறலியுமான கலைஞர்கள் சொல்லொண்ணாத் துயரத்தின் இறுதி கண்டு மறுகி நின்றனர். சிறு சீராளரும் பெருஞ் செல்வரும் வாட்டு பசியை ஓட்ட முனைந்தனர். அவர்கள்,

''ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்'' என்பது

உணர்ந்து போற்றி வந்தனர்.

ஒப்புரவு என்னும் உலகநடை அறிந்து பசிஓட்டும் பணியில் தலைநின்றான் பண்ணன். அவன் வளமனை ஊருணி நீர்நிறைந்தற்று என்பதற்கு உண்மையாயிற்று.

இதனை அறிந்தான் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இதன் உண்மை தேர்தற்குச் சிறுகுடி சென்றான்.

அங்கு அவன் கண்ட காட்சி 'வியத்தொறும் வியத்தொறும் வியப் பிறந்தன்று' என்னுமாப் போல வியப்பைக் கடந்து நின்றது. மழைவரும் காலமறிந்து தன் முட்டைகளை மேட்டு நிலத்தில் முன்னரே பாதுகாத்து வைக்கும் எறும்பின் வரிசைபோல, அணி அணியாக ஆடவரும் மகளிரும் குழந்தைகளும் உணவுருண்டியைக் கையிலேந்தி அகமும் முகமும் மலர ஆர்ப்பொலி எழுப்பிச் செல்கின்றனர். தாமதித்தால் உணவு கிடைக்காமல் போய்விடுமே என்ற கவலை எவர்க்குமே இல்லை. காரணம் என்ன? எத்துணை பேர் வரினும் இல்லை என்னாது உணவு படைக்கும் அவன் அற நெஞ்சமே அதற்குக் காரணமாய் அமையவேண்டும்.

இக்காட்சியால் எல்லையில்லா உவப்பும் இறும்பூதும் உற்ற சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். எஞ்சியுள்ள தன் வாணாளையும் அவனுக்கே அர்ப்பணம் செய்கிறான். 'யான்வாழு நாளும் பண்ணன் வாழிய' என அவனை உயிர் தழுவ முதலில் வாழ்த்துகின்றான். தமிழ்மரபில் கிள்ளிவளவனுக்கு முன்னரும் அத்தகைய வாழ்த்துமொழி அமையவில்லை. பின்னரும் இல்லை. வாழ்த்து மரபிலும்,

''வென்றி எல்லாம் வென்றகத் தடக்கிய
தண்டா ஈகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே''

என்பது போலவும்

''இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே''

என்பது போலவும் அமைந்தனவே மிகுதியாம். அம்மட்டோ! பண்ணனைப் பசிப்பிணி மருத்துவன் என்றும் பாராட்டுகின்றான். இனிப் பாட்டைக் காண்போம்.

யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி அரவம் தானும் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விட நோக்கி

முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே".

மக்கள் உள்ளத்தில் இடம் பெற்ற பண்ணன் சென்னியின் உள்ளத்திலும் இடம் பெற்று விட்டான்.

# கம்பன் பாட்டு

பா. கங்காபரமேஸ்வரன், M.A.,
தமிழ்த்துறை
அருள் மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரி,
பழனி

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள். அவற்றுள் ஒன்று. தத்துறல் ஒழிந்து நீள் தருமம் ஓங்க வந்து பிறந்தவனாகிய அஞ்சன வண்ணனின் அழகில் ஈடுபட்ட ஆரணங்கினரின் நிலையினைக் கூறும் பாட்டு. கம்பனுடைய கவித்துவத்தின் நிலைக்களனாக விளங்கும் பாட்டு. அப்பாட்டு உலாவியல் படலத்தில் வருகிறது. வில்லை வளைத்து முறித்துவிட்டு வீரன் விழாக்கோலம் பூண்டு வரும் காட்சியினைக் கவிஞன் கவிதைச் செருக்கோடு பாடுகிறான். அவன் பாட்டிலே முப்பொருள் திறனும் முகிழ்த்து நிற்கிறது. எப்படி?

மின்னொளி பரப்பும் பொன்வண்ணத் தேரிலே பூமகள் கேள்வனாகிய இராமன் உலாவருகின்றான். அவன் வரும் வீதியோ வீரவேள் அனங்கனின் ஆட்சிக்குட்பட்ட வீதியாகக் காட்சியளிக்கிறது. பரந்த வீதியின் இருமருங்கிலும் பாவையரின் ஓவிய உருவங்கள். காணுமிடத்திலெல்லாம் கார்குழலார் கூட்டம். 'பேதைமார் முதல் கடைப்பேரிளம் பெண்கள்தாம். ஏதியார் மாரவேள் ஏவ வந்து எய்தினர்' என்கின்றான் கவிஞன். அந்த மன்மதனின் படைக் கடலைக் கடந்து வருகிறது ஆதி வானவர் பிரானைத் தாங்கி வரும் அழகுத்தேர். வாளை தாவுறு கோசல நாடுடைய வள்ளலின் வருகையை எதிர்பார்த்து, வாள் விழி வீசி நின்ற வஞ்சியரின் நீல விழிகள் கோலவானத்து மேகமன்ன மேனியான் மீது பாய்கின்றன. அவ்வளவு தான். அவை எந்த இடத்தில் பாய்ந்தனவோ அந்த இடத்தை விட்டு அகலவே இல்லை. தொட்ட இடத்தை விட்டு விடாமல் அவ்விடத்திலேயே அழுந்தி விடுகின்றன. அந்நிலையினைப் பாடுகிறான் பாவலன்.

''தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல்
கமலமன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண்
டாரு மஃதே

வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத் தன்னான் உருவுகண் டாரை ஒத்தார்''

இராமனுடைய தோளைப் பார்த்தவர்கள் தோளையே பார்த்தனராம். தாமரை மலரைப் போன்ற தாளைக் கண்டவர்கள் தாளையே கண்டனராம்: கைகளைக் கண்டவர்களும் அவ்வாறே. எவரும் அவனுடைய முழுவடிவினைக் காணவில்லை என்கிறான் கவிஞன். அமரர் வைகும் வான் கடந்தவனாய இராமனை அயில் விழியால் நோக்கிய அணங்கனையாரின் நிலையினை அழகுபடக் கூறுகிறான் கவிஞன். ஏன் இந்த நிலை?

இன்னவர் இன்ன உறுப்பைத்தான் காண வேண்டும், கண்டு களிக்க வேண்டும் என்று அவர்களுக்குள் பங்கிடு செய்து கொண்டார்களா? அல்லது ஆடவர் பெண்மையை அவாவு தோளினையும் தாளையும் தடக்கையையும் தவிர மற்றைய உறுப்புகள் அனைத்தும் பிறரைக் கவரக்கூடிய வெற்றியை இழந்திருந்தனவா? இராமனுடைய அடிமுதல் முடிவரை வருணிக்கும் கவிஞனே இராமனைப் பேரழகின் பேரெல்லையாகக் காட்டியுள்ளான். இராமனுடைய உறுப்புக்களின் அழகையெல்லாம் அள்ளித்தெளிக்கும் பகுதியாக அப்பகுதி அமைந்துள்ளது. அப்படியிருக்க இந்தப் பெண்கள் இப்படிப் பட்ட நிலைக்கு உள்ளாகக் காரணம் என்ன?

அறம்செய் காவற்கு அயோத்தியில் தோன்றிய அறத்தின் மூர்த்தி இராமன். அவனுடைய அறத்தின் ஆற்றலை, அருளின் பெருமையை, அன்பின்செயலை உலகம் உணர்ந்து உவகைக் கடலுள் மூழ்கி உய்யவேண்டுமல்லவா? அதனுள் மூழ்கி மூழ்கித் திளைத்தவன் கம்பன். அதனால்தான் அதனை உலகமும் உணர வேண்டும், உணர்ந்து துய்க்க வேண்டும், துய்த்துத் தொல்லையின்றி எல்லையில் இன்பத்தை எய்தவேண்டும் என்ற பெருநோக்கால் அவற்றை உரைக்கின்றான். அவனுடைய உரைக்கு உருவமாக அமைகின்றன இராமனுடைய தோளும் தாளும் தடக்கையும். அவற்றின் வெற்றி அறத்தாற்றலின் வெற்றியாக, அருளின் வெற்றியாக, அன்பின் வெற்றியாக அமையக் காணுகிறோம். எப்படி?

தேவரொடு இடங்கொள் நான்முகனையும் படைக்கும் வல்லமை படைத்தவராகிய விசுவாமித்திரன் தனது வேள்விக்கு

இடையூறு விளைவிக்கும் அரக்கரை வேரறுக்க விழைகிருர். அவ் விழைவோடு தயரதனைக்காண வருகிருர். தான் வந்ததன் காரணத்தைக்கூறி நின்சிறுவர் நால்வரினும் கரியசெம்மல் ஒருவனைத் தந்திடுக என வேண்டுகிருர். முதலில் தயங்கிய முடிமன்னன் வசிட்டரது கருத்தை ஏற்று அஞ்சனவண்ணனை அருந்தவ முனிவருடன் அனுப்புகிருன், வேள்வி தொடங்குகிறது. கொற்றவில் ஒன்று தாங்கி உலகம் தாங்கிய அறிவின் உம்பரானுக்கும் அருளில் உள் ளத்து அரக்கர் குலத்தவளாகிய தாடகைக்கும் இடையே பெரும் போர் தொடங்குகிறது. அதுதான் காகுத்தனுடைய கன்னிப்போர்; அரக்கரின் உயிர் குடிக்க அஞ்சி ஆசையால் உழன்ற கூற்றுவன் சுவை சிறிது அறிய நடைபெற்ற முதற்போர். அப்போரில் அல்லின் மாரி அனைய நிறத்தவளின் வயிரக் குன்றக் கல்லொக்கும் நெஞ்சைத் துளைத்துக்கொண்டு இராமபாணம் செல்கிறது. தாடகை மின்னெடும் இடியினேடும்வீழ்கின்ற மேகத்தைப்போல வீழ்கிருள். வில்கொண்ட மழையன்னுன் வெற்றி பெறுகிருன். விண்ணவர் பூமழை பொழிந்து வாழ்த்திவிட்டுப் போகின்றனர். தாடகையுடன் நடைபெற்ற அப்போரிலே ஆற்றலோடு கூடிய அறம் அழிவிற்கு வழிகோலும் மறத்தை அழித்து ஆனந்தக் கூத்தாடுகின்ற காட்சியைக் காணுகின்ருேம். அவ்வெற்றி அறத்தின் நாயகனது ஆற்றல் மிக்க அறத்தின் வெற்றியாக அமைகிறது. அதனை ஈட்டிக் கொடுப்பது அவனுடைய தோள். அதனுல்தான் அதன்மீது பதிந்த பாவையரின் பனிமலர்க் கண்கள் அத்தோளைத் தவிர வேறெதையும் காணவில்லை என்கிருன் கவிச்சக்கரவர்த்தி.

அடுத்து, உலகெலாம் அளந்தோனும் உவகைமிகுமுனிவரும் மிதிலையை நோக்கிப் பயணமாகின்றனர். வழியில் வரந்தரு முனிவராகிய கௌசிகருடைய வாழ்க்கைத் துணைவியாக வந்து அமைந்தவராகிய அகலிகை நெடும்பழி பூண்டு நிலத்தில் கல்லாகக் கிடக்கின்ருள். தீதிலா உதவி செய்த சேவடிக் கரிய செம்மலின் திருவடிகள் பட்டவுடன் உண்மை வடிவோடு உயிர் பெற்றெழுகின்ருள். அன்னையை அனையவளாகிய அவளை அருமுனிவரின் பெருந்துணையாக மீண்டும் ஏற்றுக் கொள்ளச் செய்கிருன் இராமன். இது இராமனுடைய அருளுக்குக் கிடைத்த வெற்றியாக அமைகிறது. எனவே தான் ஓங்கி உலகளந்த அந்த உத்தமனின் தாளைக்கண்டவையலார் அத் தாளைத் தவிர வேறெதையும் காணவில்லை என்கின்ருன் கம்பநாடன்.

இனி, காதலித்த உருவாகி அறம் வளர்க்கும் கண்ணுளனுகிய இராமனும் மிதிலைப் பொன்னும் சந்திக்கின்ற காட்சியைக் காண லாம். அண்ணலும் நோக்கினுள் அவளும் நோக்கினுள் எனச் செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சங்கள் கலந்த நிலை யினைக் கூறுகிருன் கவிஞன். உணர்வு ஒன்றிட அன்பின் வயப்பட்ட இருவரையும் இணையவொட்டாதபடி தடுத்து இடையே தடையாகக் கிடக்கிறது சிவதனுசு. அதனை எடுத்து வளைத்து நாணேற்று கின்றவன் எவனே அவனே நங்கையார் திலகமன்னுளை மனைவி யாக மணந்து கொள்ள முடியும். அதனுல், தடையை அகற்றி விட்டு அமிழ்தின் வந்த தேவியை மேவிட விழைகிருன். அன்பிற்கு அடைக்குந் தாழாகக் கிடந்த வில்லைக் காணுகின்ருன். சீதையின் மீது வைத்திருந்த அன்பு சுந்தரவில்லிக்கு ஆற்றலைக் கொடுக்கிறது. எப்படி? அறத்திற்குச் சார்பாயிருக்கும் அன்பு மறத்திற்கும் துணை யாக இருப்பதால் அவ்வாற்றலோடு வில்லை எடுக்கின்ருன். கொற்ற வன் மண்டபத்தில் கூடி நின்ற மக்கள் கொண்டல் நிற வண்ணன் வில்லை எடுத்ததைக் காணுகின்றனர். அடுத்த விஞடி அது விற்று விழுவதால் எழும் இடியொலியினைக் கேட்கின்றனர். இமைப் பொழுதில் எல்லாம் முடிகிறது. ஒரே விஞடி வெற்றி வேதமுதல் வனைத் தேடியடைகிறது. அவ்வெற்றி அண்ணலின் அன்பு உள்ளத் திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. அதற்குத்துணை அவனது தடக்கை. ஆகவே தான் அக்கையினைக் கண்ட அரிவையர் அதைத் தவிர பிற உறுப்புக்களில்பார்வையைச் செலுத்தவில்லை என்கின்ருன் கவிஞன்.

இவ்வாறு ஒரே ஒரு பாட்டில் அறத்திற்கும் அருளிற்கும் அன்பிற்கும் கிடைத்த வெற்றியினை அழகுபடக் கூறுகிருன் கல்வி யில் பெரியவன். இப்படி எத்தனையோ பாடல்கள்! அவற்றைக் கண்ணுற்ற அறிவுலகம் பயன் பெறட்டும்.

# கற்பனை வளத்தில் நந்தனர் சரித்திரக் கீர்த்தனை

டாக்டர் ஏ. என். பெருமாள் M. A., PHD
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
அடையாறு.

கவிஞனின் கனவுகள் கற்பனையால் வளமாக்கப்பட்டு இலக்கியக் கலையாக மலர்ச்சியடைகிறது. புறத்தில் காண்பவற்றிற்கு ஒரு கலையுருக்கொடுக்க விரும்பும் கவிஞனுக்கு அவனது மனத்தகத்தே கைகொடுத்து உதவுவது கற்பனையே ஆகும். கற்பனை குன்றின் சுவையும் குன்றும்; கலையும் சிதையும் இன்னொரு முறையில் இதனை விளக்க விரும்பின் இவ்வாறு கூறலாம். கலையின் வார்ப்பு வடிவம் மனத்துள் உருவாகிறது. அதன் அமைப்பு மூலமாகக் கற்பனை பயன்படுகிறது. கற்பனையின் சிறப்புக்குத் தக்கவாறு கலையானது உயர்வு பெறுகிறது. ஆனைதாண்டாபுரம் கோபாலகிருஷ்ண பாரதியார் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாடிய ''திருநாளைப்போவார் என்னும் நந்தனர் சரித்திரக் கீர்த்தனை'' எந்த அளவுக்குக் கற்பனை வளம் பெற்றுச் சிறந்துள்ளது என்பதைக் காண்போம்.

அக்காலத்தில் மக்கள் எந்த இலக்கிய அமைப்பைப் பெரிதும் விரும்பினர்களோ அதனையே பாரதியார் தான் இயற்றும் நூலின் அமைப்பாகக் கற்பனை செய்து கொண்டார். இந்நூல் இசைக்குச் சிறப்பிடம் கொடுக்கிறது. எனவே 'கீர்த்தனை' என்னும் பெயரைப் பெறுகிறது. ஆயினும் 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் உருவான முதல் கீர்த்தனை நூலான அருணசலக்கவிராயரின் இராம நாடகத்திலிருந்து இது பல முறைகளில் வேறுபட்டு விளங்குகிறது. காலப்போக்கில் மக்களின் மனத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி நிலையையும் மாற்ற எண்ணங்களையும் நன்ருகப் புரிந்து கொண்ட பாரதியார் அவற்றிற்குத் தக்கவாறு தன்னுடைய படைப்பின் அமைப்பையும் கருத்தோட்டத்தையும் மாற்றியுள்ளார். இந்நிலையில் அவரது கற்பனை ஆற்றல் நல்ல முறையில் உதவியுள்ளது என்பதை மிகத் தெளிவாகக் காண முடிகிறது.

இராமநாடகத்தில் தரு. திபதை, விருத்தம் ஆகிய மூன்று வகையான இசைப்பாடல்கள் இருக்க, நந்தனர் சரித்திரக் கீர்த்தனையில் விருத்தம், கீர்த்தனை, நொண்டிச்சிந்து, கண்ணி, துக்கடா,

சவாயி, கட்கா, பெரியகட்கா, தண்டகம், அகவல் ஆகியவை இடம் பெறுவதோடு இசை அமைப்பு முறையிலும் பல்வேறு வகைகளைக் கொண்டு சிறப்புறுகிறது. மேலும் இரு சொல்லலங்காரம், ஆனந்தக் களிப்பு, ஏசல் ஆகிய பகுதிகள் மாறுபட்ட இசையிலும் வேறுபட்ட சுவையிலும் கலந்து புகுத்தப்பட்டுள்ளன. அவை நாடகத் தன்மையைப் பெருக்கிக் காட்டுகின்றன.

இருசொல்லலங்காரம் என்று குறிப்பிடப்படுவது இருவர் மாறி மாறிப்பேசுவது போன்று பாடப்படுவது. சொல்விளையாட்டு, பொருள் புனைவு ஆகியவற்றுக்கு அதில் சிறப்பான இடம் கொடுக்கப்படுகிறது. நாடகம் போன்றே இந்த இடங்கள் மிகுந்த சுவையுடன் விளங்கும். நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் இம் மாதிரி அமைப்பு 12 இடங்களில் வருகின்றன. சில மிக நீண்டு காணப்படுகின்றன. ஒருகீர்த்தனை (ப. 32) ஒரு விருத்தம் (ப.33) ஆகியவற்றைக் கூட உரையாடல் பாங்கில் கோபாலகிருஷ்ண பாரதியார் அமைத்து நாடகச் சுவையைப் பெருக்க முயல்கிறார். இராமநாடகக் கீர்த்தனையில் 4 இடங்களே இவ்வாறு பாடப்பட்டுள்ளன.

நந்தனார் கீர்த்தனையில் உரைநடைப் பகுதிகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. முதல் கீர்த்தனைநூலில் ஒரே ஒரு இடத்தில் மாத்திரம் மிகக் குறுகிய அளவில் உரைநடை பயன்படுத்தப்பட்டுள்ளது. கோபால கிருஷ்ண பாரதியார் இடத்துக்குத் தக்கவாறு நீண்டதாகவும் குறுகியதாகவும் உரைநடைப் பகுதியைக் கையாளுகிறார். அவற்றில் நாடகச்சுவை நயம்பட அமைந்துள்ளது.

சேரியிலுள்ள பெரிய கிழவரும் நந்தனாரும் சந்திக்கிறார்கள். முதியவரை மனமாறச் செய்து சிவநாமம் ஓதச் செய்ய வைக்கிறார் நந்தனார். அதனைப் பாரதியார் கற்பனைப் பொலிவுடன் சுவைபட உரைநடையில் கூறுவதைக் கேட்கலாம். 'நந்தனார் இவ்விதம் சொல்லி சிவகாமவல்லி பாகனை நினைத்து நீரள்ளிப் பெரிய கிழவன் முகத்திலே தடவி வாயிலே போட்டுக் கட்டியணைத்துக் காதிலே சிவமந்திரம் உபதேசித்தார். உடனே பெரிய கிழவன் சித்தம் தெளிந்து சிவமாய் நிறைந்து உற்றதுணர்ந்து ஒருவனாயிருந்து அத்தனடியார் அருள் இதுவென்று பக்தி மிகுந்து பரவசம் கொண்டு பேசத் தெரியாமல் பேசுவான், ''நான் இன்றைக்குத்தான் பெரிய கிழவனானேன். நந்தா! எனது பந்தம் தீர்க்கவந்தாய்; முக்தி

தந்தாய்'', என்று சுற்றி வந்து அடிபணிந்து விடைபெற்று ''கண்டேன், என் கலி தீர்ந்தேன், ஆனந்தம் கொண்டேன், குறை. தீர்ந்தேன், அமிர்தமுண்டேன், பசிதீர்ந்தேன், பிறவிவென்றேன், வீடு நின்றேன்,'' என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு பெரிய கிழவனுர் நந்தனுரால் உபதேசம் பெற்று வருகிருர்.' (ப. 40) இதன் மூலம் நடக்கும் செயல், பேசும் பேச்சு, உணரும் உணர்ச்சி அத்தனை யும் அறியும் படியாக ஆசிரியர் செய்து விடுகிருர்.

இத்தகைய பகுதிகளைப் பாரதியார் இன்னிசைப் பொழிவாக (கதாகாலச்சேபம்) மக்கள் முன்னிலையில் உணர்ச்சியுடன் பாடியும் உரைத்தும் காட்டும்போது அவர்கள் ஒரு நாடகத்தைக் கண்டு களிக்கும் உணர்வுடன் காணப்படுவார்கள். பெரும்பாலும் நிகழ்ச்சி களின் பின்புலத்தை உரை நடைகளிலும் பாத்திரங்களின் உரைகளை இசைப்பாடல்களிலும் அமைத்து நூலினைச் சமைத்துள்ளார்.

அளவுக்கு மீறி நீண்ட இசைப்பாடல்கள் நந்தனுர் சரித்திரக் கீர்த்தனையில் இடம் பெறவில்லை, சிறிதளவு நீண்டதாகத்தோன்றும் பாடல்கள் இராகமாலிகைகளாக உள்ளன. பல்வேறு சுரபேத முடைய பல இராகங்களை மாற்றி மாற்றிப்பாடும் இசை அமைப் பில் இவை இருப்பதனுல் கேட்போருக்குச் சலிப்பு ஏற்பட ஏதுவே இல்லை. வேதியர் நந்தனுருக்குச் சொல்வதாக வரும் ஒரு நீண்ட பாடலை (ப.95-97) 13 இராகங்களில் அமைத்துள்ளார். கேட்போரின் மனநிலையை நன்ருக உணர்ந்து கூடிய வரையிலும் அவர்களுக்கு அலுப்புணர்வு ஏற்படாத வகையில் பாடல்களை யாத்துள்ளார். ஒலிநயம், இசையமைப்பு ஆகியவை சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்குப் பழக்கமான நாட்டுப் புறப்பாடல்களின் தன்மைகளைக் கையாண்டு பல பாடல்களைப் பாரதியார் பாடி யுள்ளார். நொண்டிச்சிந்தும் லாவணியும் அதற்கு நல்ல எடுத்துக் காட்டுகளாகும். மொழிநடையும் மிக எளிமையாகவே உள்ளது. நந்தனுர் சரித்திரக் கீர்த்தனையின் அமைப்பை நோக்கும்போது அது இன்னிசைப் பொழிவுக்கு இசைந்த வடிவமாக உள்ளது என்று கூறலாம். கீர்த்தனை அமைப்பிலிருந்து நாடக நிலைக்கு வளர்ச்சி யுறும் போக்கை இந்த நூலில் காண முடிகிறது. மக்களின் மனப் போக்கை நன்ருக உணர்ந்த ஒரு இலக்கிய ஆசிரியர் தன் கற்பனை ஆற்றலினுல் ஏற்படுத்திக் கொண்ட ஒரு வடிவமாக இது காணப் படுகிறது. பழமை உருவை ஏற்றுக் காலத்திற்குத் தக்க மாற்றங்

களைப் புதுமையாகப் புகுத்திக் கலைப்பெருகு ஏற்றி பலவித இலக்கிய உத்திகள் மூலம் கோபாலகிருஷ்ணபாரதியார் மக்களைச் சிறப்பாகக் கவர்ந்துள்ளார் என்று கருதலாம்.

பெரியபுராணத்தை நன்றாகக் கற்றுத் தனது கலையாற்றலினால் பலமிதமான மாற்றங்களைச் செய்து இந்தக் கீர்த்தனைநூலை ஆசிரியர் படைத்துள்ளார். உள்ளதை உணர்ச்சியுடன் கூறும் போது கூடல், குறைதல். திரிதல் ஆகியவை நேர்தல் இயல்பு. பாரதியார் சில பாடல்களை அப்படியே முதல்நூலில் இருப்பது போன்று ஏற்றுக்கொண்டாலும் பல இடங்களில் பல்வேறு மாற்றங்களைச் செய்துள்ளார். பெரும்பாலும் அவர் செய்துள்ள மாற்றங்கள் வியப்புணர்ச்சியைக் கொடுப்பனவாகவும் நந்தனுருடைய பக்தியின் பெருக்கைப் புலப்படுத்துவனவாகவும் அமைந்து உள்ளன. அத்தகைய இடங்களில் சில இயற்கை இகந்த நிகழ்ச்சிகளாகக் காணப்படுகின்றன.

திருப்புன்கூர் ஆலய தரிசனம் செய்த பின்னர் வீதியில் மட்டையூறும் குட்டையைக் குளமாக வெட்ட வேண்டுமென்று நந்தனார் விரும்புகிறார். அது அவரால் இயலாது என்று அறிந்த சிவபெருமான் பிள்ளையாரை அனுப்பி அப்பணியைச் செய்யுமாறு ஏவுகிறார். திடீரென்று ஒரு குள்ளமான மனிதன் தோன்றி பள்ளத்தைத் தோண்டி வெள்ளம் நிறைந்து வழியும் குளத்தை அமைத்ததாகக் கூறப்படுகிறது.

இன்னொரு வியப்புறு நிகழ்ச்சியும் விளக்கப்படுகிறது. வேதியர் நந்தனரைத் தில்லைக்குச் செல்லவிடாது தடுக்கிறார். நந்தனார் திரும்பத் திரும்பக் கெஞ்சுகிறார். அதனால் கோபமடைந்த வேதியர் வயல் வேலைகளை எல்லாம் முடித்துவிட்டுச் செல்லுமாறு கடுங்குரலில் ஆணை இடுகிறார். அது இலகுவில் முடிகிற வேலை இல்லை. ஆகையினால் நந்தனார் இறைவனை வேண்டி அப்படியே அயர்ந்து தூங்கிவிடுகிறார், மறுநாள் வியப்பிலும் வியப்பான செயல் நடந்துள்ளது. நிலங்கள் அனைத்தும் விளைந்த பயிரால் நிறைந்து காணப்படுகிறது. வேதியருக்கு வியப்பும் அதிர்ச்சியும் ஏற்படுகின்றன. அந்த உணர்ச்சி வேகத்தில் அப்படியே நந்தனாரின் நல்லடிகளில் விழுந்து வணங்குகிறார். இவ்விடத்தில் கோபாலகிருஷ்ணபாரதியார் ஒரு புரட்சி வித்தைத் தூவியது போன்று தோன்றுகிறது. இத்தகைய ஒரு மாற்றத்தினைப் புகுத்திக் காட்டுவதற்காக இந்த இயற்கை

இகந்த நிகழ்ச்சியைக் கற்பனை செய்ய வேண்டிய தேவை ஆசிரிய ருக்கு ஏற்பட்டதாகக் கருதலாம். சேக்கிழாருக்குத் தேவைப்–படாது பாரதியாருக்குத் தேவைப்பட்டதற்குக் காரணம் காலத்தின் ஓட்டமும் சமுதாயத்தின் மாற்றமும் ஆகும் என்று கூறலாம். நடக்க முடியாததை நடந்தது போன்று கற்பனை செய்துள்ளது வெறும் கற்பனையே ஆயினும் இது தேவை கருதிக் கையாளப்பட்ட இடமாகையினால் அதைவிடவும் சற்று மேம்பட்டதாகக் கருத இடமுள்ளது. மேலும் அக்கால மக்கள் இத்தகைய நிகழ்ச்சிகளை வெறும் கற்பனை என்று ஒதுக்காது வியப்புறு செய்திகளாகக் கருதினார்கள் என்ற குறிப்பு இருப்பதினால் இம்மாதிரிக் கற்பனைகளை ஒதுக்கித் தள்ள முடியாத நிலையில் நாமும் இருக்கிறோம்,

ஒரு கற்பனையின் கருமூலம் கொண்டே 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' பாடப்பட்டது என்று கூறப்படுகிறது. ஆசிரியர் நூலை எப்படித் தொடங்கலாம் என்று சிந்திக்கிறார். அவருக்கு முன்னால் பாலும் பழமும் வைக்கப்பட்டுள்ளன. பழத்தைப் பார்த்ததும் 'பழனம்' நினைவுக்கு வரவே 'பழன மருங்கணையும்' என்றுபாடத் தொடங்கினாராம். நேராக ஆசிரியரே கதையைக் கூறாது உபமன்யு பகவான் முனிவர்களுக்குச் சொல்லும் வரலாறாகச் சொல்லப்படு கிறது. இந்தத் தொடக்க முறையிலும் ஆசிரியரின் கற்பனை ஆற்றல் சிறப்புற்று விளங்குகிறது. மக்களின் மனத்தைக் கதையின்பால் ஈடு படவைத்து அதற்கு ஓர் உயர்வு கொடுக்க இத்தகைய உத்தியினைப் பாரதியார் கையாண்டுள்ளதாகக் கருதலாம்.

பெருவழக்காக உள்ள கதைகளைப் புராண நிகழ்ச்சிகளுடன் இணைத்துத் தன் கற்பனை ஆற்றலினால் எடுத்துக் கொண்ட கருத் துக்கு உயர்வு கொடுக்கும் பாங்கினைக் காண முடிகிறது. நந்தனார் சிவாலயங்கள் தோறும் சென்று இறைவனை வணங்கி வருவதனை விளக்கும் பாரதியார்,

> 'உமையொரு பாகத்தில் உயர்ந்த பரன் தருமம்
> ஒரு பசுவும் கன்றாக மாயவேடம்
> சமைந்து பின்மனுநீதிச் சோழன் தனக்குக்
> காட்சிதந்த வாரூர்சென்றா ரன்பாக' (ப.14)

என்று கூறுகிறார். திருவாரூருக்குச் சிறப்புக் கொடுக்க விரும்பிய ஆசிரியர் இவ்வாறு உரைக்கிறார். நீதியும் நிமலமும் நிறைந்தவன் இறைவன் என்றும் நீதியை நிலைநாட்டத்தோன்றுவான்என்றும் இதன் மூலம் ஆசிரியர் அறிவுறுத்த விழைகிறார் எனக் கருதவும் இடமுள்ளது.

ஆசிரியர் தனது கற்பனை ஆற்றலினால் பாத்திரங்களின் உணர்ச்சிப் பெருக்கினை வெளிப்படுத்திக் காட்டுவதோடு மனத்தே எழும் எண்ண அலைகளையும் அவற்றின் மோதல்களையும் புலப்படுத்திக் காட்டும் முறையினையும் கண்டு உணரலாம்.

நந்தனார் திருப்புன்கூர் ஆலயத்தின் முன் நின்று இறைவனை வணங்க விரும்புகிறார். அங்கு கருவறை தெரியாதவாறு நந்தி மறைக்கிறது. அதனைக் கண்ட நந்தனார் மனம் நொந்து கூறுவதைக் கேட்கலாம்.

'சிவலோக நாதன் திருச்சன்னிதானம்
மலையாகிய நந்தி மறைத்திடுதிங்கே
பலகாலஞ் செய்த பாழ்வினை குவிந்து
மலையாகி யிப்படி மறைத்ததே வென்றார் (ப.19)

இந்தச் சவாயி அமைப்புப்பாடல் மூலம் நந்தனாரின் அந்த நேரத்து மனநிலை ஆசிரியரின் கற்பனை ஆற்றலின் திறத்தால் செவ்வனே வரைந்து காட்டப்படுகிறது.

பாத்திரங்களின் தகுதிக்கும் இயல்புக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஒத்த முறையில் உவமைகளையும் சொற்களையும் அவர்கள் வாய்மூலம் வெளியிடும் பாங்கினைக் கண்டு மகிழலாம். நந்தனாரைக் குறிப்பிட்டு வேதியர் கூறும் போது,

'பலகாலம் பழமும் பாலும் ஊட்டினாலும் பாம்பு
பழகாததற்கு வொப்பாய்ப் பகரலாகுமே தீம்பு' (ப,86)

என்று குறிப்பிடுகிறார். நந்தனார் தன்னைச் சுட்டிச் சொல்லும் போது,

'சிங்கம் புசித்திடும் இறைச்சியை
வேறொரு செந்நாய் தொடலாமோ
சிதம்பரம் நான்தொட லாமோ
சாதியில் சின்னவ னானன்றே' (ப.90)

என்று வருந்திக் கூறுகின்றார்.

எதிர் எதிரான நிலைகளை நேரெதிரான தன்மைகள் காட்டி விளக்கும் இடங்களில் கோபால கிருஷ்ணபாரதியாரின் கற்பனை உணர்வு பளிச்சிடுவதைக் காணலாம் மாதவத்தோர் என்று மதி மயங்கி இருப்போரையும் புலையர்களையும் வேதியரின் மனநிலைக்கு ஏற்ப வேறுபடுத்த முயல்கிறார்.

'வானிருந்த விடந்தேடி காணுமல் மாதவத்தோர் மதி மயங்கித்
தேனிருந்த செந்தாளைச் சிந்திப்பார் புந்தியுறத் தெளிந் தாரில்லை
ஊனருந்தும் புலையா நீசிதம்பரம் சென்ருலும் உண்டோ முத்தி (ப.80)

உருவகமாகத் தத்துவ உண்மைகளைப் பாரதியார் மிகச் சிறப்பாக விளக்குவதைப் பார்க்கலாம். பலைத் திருந்தி நந்தனுரைப் பின்பற்றிய 11 புலையர்களின் நிலையினை அழகாகச் சித்தரித்துக் காட்டுகிருர்.

'ஓங்கார மென்று சொல்லும் உரலைப் போட்டு
உறுதியெனும் இநம்புலக்கை கையிலேந்தி
ஆங்கார மென்ற தட்டு வடிவ மிட்டு
அடிக்கடியே கண்ணியதைப் புடைத்தெடுத்து
நீங்காத சிவயோக நிஷ்டை கொண்டு
நிமலமதாய் அவர்களைச் சுற்றிவந்து
பாங்கான நந்தனிரு தாளைப் போற்றிப்
பணிந்திட்டார் திருநீற்றை யணிந்திட்டாரே' (ப. 52)

மக்களுக்கு எளிதாக அறியக் கூடிய பழக்கமான ஒரு செயலைக் கொண்டு உருவகம் படைத்திருப்பது சிந்திப்பதற்கு உரியது.

குறிப்பிடப்படும் பாத்திரங்களின் மனநிலைகளை உருக்காட் டும் படிவங்களாகவே உவமைகள் கற்பனை செய்யப் பட்டுள்ளதைப் பெரும்பாலான இடங்களில் காண முடியும்.

'கரைபுரளும் கடலதுபோல் சிவந்தினிமை—
கருத்துணரக் கண்டெல் லோரும்'(ப. 55)

என்று கூறும்போது நந்தனுரின் மனத்துள் நிறைந்து பொங்கும் சிவப்பற்றையும்,

'தூண்டில் மீனதுபோல் துள்ளித்துள்ளித்
துடிப்பான் பற்களைக் கடிப்பானே' (ப. 56)

என்று குறிப்பிடும்போது அவரது மனத்துடிப்பையும் ஆசிரியர் தனது கற்பனை ஆற்றலின்மூலம் படம் பிடித்துக் காட்டும் முறையினை அறிந்து மகிழலாம்.

அரும்பெரும் தத்துவமாகிய ஆதிசிவத்தைப்பற்றி அனே வருக்கும் புரியும் வண்ணம் விளக்க முற்படும் பாரதியார் தன்னுடைய கற்பனே ஆற்றலே எழிலுறப் பயன்படுத்தி எளிதான குறிப்புக்கள் மூலம் புலப்படுத்திக் காட்டுகிருர், பேரின்ப மன்றுகிய தில்லேப் பெருவெளியில் 'பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது' (ப. 74) என்று முதலில் குறிப்பாகக் கூறிப் பின் சிறப்பாக விளக்க விரும்புகிருர். கற்பனே சிறந்த முறையில் ஊறி வழிகிறது

'பாம்பும் புலியும் மெய்ப்பாடு
பட்டுத்தேடிப் பார்த்துப் பயிரிட்டது
பாரளந்த திருமாயனும் வேதனும்
பார்த்துக் களித்த துண்டு
பார்வதி யென்ருெரு சீமாட்டியதில்
பாதியைத் தின்றதுண்டு—இன்னம்
சாதியிருக்கு பறையா நீயும் போய்ப்
பாரென்றுத் தாரம் தாரும் தீரும்' (ப. 74)

சிவபெருமானே மருந்தாக உருவகப் படுத்திக் காட்டுவதில் பொதிந்துள்ள உயர்ந்த தத்துவப் பொருளே நன்ருகச் சிந்தித்து உணர வேண்டும்.

சிறியசிறிய உருவகம் உவமை ஆகியவற்றைப் படைத்துப் பெரிய பெரிய கருத்துக்களேத் தன் கற்பனே ஆற்றலின் திறத்தால் விளக்கமுறச் செய்யும் பாங்கு வியக்கும்வண்ணமாக உள்ளது. பக்திவலே(ப.51) மாயவலே (ப.76) பிறவிக்கடல் (ப.79) பவக்கடல் (ப.102) கருணேமாரி (ப.95) பூளேப்பூவாம் பிறவி (ப.113) இவ்வாறு பலப்பல.

இறைவனின் பெருமையினேயும் மனிதனின் சிறுமையினேயும் விளக்கும் இடம் உணர்ந்து அறியத்தக்கது ஆகும். நந்தனுரின் வாயிலாக ஆசிரியர் கூறுவதைக் கேட்கலாம்.

'மேவும் கீரைத்தண்டு மேருவைத் தாங்குமா
வீசும் கதிர்முன் மின்னும் பூச்சி ஓங்குமா
ஆவது அழிவது எல்லாம் ஐயன் தன்னுலே
ஆச்சுது என்ருல் என்னவாச்சுது என்னுலே'

(ப. 104)

இறைவனே நெருங்குவது கடினம். நெருங்கிவிட்டால் பின் பெறுவது பெரும் பேரின்பம் என்பதை விளக்க,

'எட்டாப் பெருங்கொம்பு—நெருங்கித்
தொட்டால் செங்கரும்பு' (ப. 111)

என்று கூறுகிறார் கோபாலகிருஷ்ண பாரதியார்,

ஒரு பெரும் சமூக எழுச்சியையும் அரும்பெரும் தத்துவ விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட மக்கள் இலக்கியமான 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில்' வெறுங் கற்பனை அருகி, பொருள் சிறப்புடைய தத்துவ விளக்கக் கற்பனை பெருகிக் காணப்படு- கிறது.

**குறிப்பு:** குறிப்பிடப்பட்டுள்ள பக்க எண்கள் ஆர். ஜி. பதி கம்பெனி, சென்னை - 1, 1967 இல் பதிப்பித்த 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' பதிப்பினைச் சார்ந்தது.

# தமிழுக்கு மாற்றம் தேவையா?

ந. நடராஜபிள்ளை, M.A.,
மைசூர்.

மொழி, நம் கருத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள உதவும் கருவி, சிறந்த, தெளிந்த முறையில் கருத்தை வெளியிடச் சிறந்த கருவி தாய்மொழியே. பிறமொழிச் சொற்களால் புரிய வைக்க இயலாத நிலையில் தாய்மொழி கைகொடுப்பது கண்கூடு. எனினும் காலத்திற்குத் தகுந்தாற்போல் மொழி மாற்றம் அடைந்து வருவது தவிர்க்க இயலாத ஒன்று. தமிழ்மொழிவரலாற்றை நோக்கும் போது, இம்மாற்றம் எளிதில் விளங்கும். மொழியில் ஏற்படுகின்ற பல கிளைமொழிகளுக்குக் காரணம் இம் மாற்றங்களே!

இவ்வாறு தனக்குள்ளேயே மாறிக்கொண்டு வருகின்ற மொழியில், பிறமொழிச் செல்வாக்காலும் (influence) மாற்றங்கள் ஏற்படுகின்றன. தமிழக அரசியலில் சமஸ்கிருதம் கொண்ட பங்கினால்தான் தமிழில் இவ்வளவு சமஸ்கிருதச் சொற்களைக் காண முடிகிறது. சமஸ்கிருதத்தின் தொடர்பால்தான், இத்தனை திராவிடமொழிகள் கிளைத்தன என்பது மறுக்க முடியாத உண்மை. என்றாலும், தமிழில் சமஸ்கிருதம் ஏற்படுத்திய மாற்றம், ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ, ஸ்ரீ போன்ற எழுத்துக்களின் தோற்றமும், ஏராளமான சொற்களுமே.

ஆனால், சீரிளமைத் தமிழ் இம்மாற்றங்களைத் தாங்கியும், தன்னளவில் அதிக மாற்றம் காட்டாமல் வாழ்ந்து வருவது தமிழின் சிறப்பைக் காட்டும். புதிய புதிய சொற்களைத் தோற்றுவிக்கின்ற தன்மையை எப்போது மொழி இழக்கின்றதோ அப்போது அது சாகத் தொடங்குகிறது என்று பொருள். உண்மைதான். கால மாற்றத்திற்குத் தகுந்தாற்போல் மொழியில் சொற்கள் தோற்றுவிக்கப்படவேண்டும்.

உலகநாடுகளிடையே, பண்பாட்டு, பழக்கவழக்கத் தொடர்புகள் பெருகி வரும் இந்நாளில் மற்ற மொழிகளில் ஏற்படுத்தப் படுகின்ற புதிய புதிய சொற்களுக்கு நேரான சொற்களைத் தோற்றுவிக்க வேண்டும். இல்லையெனில், அச் சொற்களையே ஏற்றுக்

வைகலின் அயர்ந்து கிடக்கின்றான் கோவலன். மாசற்ற வெண்ணிலா வானமென்னும் நெடு வயலில் அமுத ஒளியை இறைத்துக் கொண்டிருக்கிறது. இரவு தொடங்கியதிலிருந்து வைகறை ஈறாக உள்ள யாமவேளையிலே, மலரம்பும், கரும்பு வில்லும் ஏந்திக் காமவேள், நகரை வலம்வந்து கொண்டிருந்தான். அதுபோது, தன்னுடைய மாளிகையின் தோட்டத்தில் அன்றலர்ந்த முல்லை மலரிதழ்களுடன், மல்லிகைப் பூக்கள் மட்டுமின்றி, பல்வேறு நறுமண மலர்ப்போதாரஞ் சூழ்ந்த பள்ளியறையினுள்ளே அமர்ந்துள்ளாள் தாதவிழ் புரிகுழல் மாதவியாள். அவளுடைய மெல்லிடையைச் சுற்றி இருக்கும் செந்துகிலின் மீது, ஒளி படைத்த பவளமணிமேகலை தளர்ந்ததனுல் மெல்லெனும் ஒசை கிளர்ந்தது. இராக்காலத்து முழுநிலவின் பயனையும் சுவைத்தற் பொருட்டு. ஊடலும் கூடலும் ஒருங்கே அளித்துக் கோவலனோடு இன்புற்றிருக்கிறாள் அவள். மிக்க ஆர்வத்தை, குழல் முகில் மறைத்த குளிர்முகநிலவில் கூட்டி, கோவலனை நோக்கியவண்ணம் இத்தன்மையளாய் மாலைநேரத்தையும் அதனொடு பிறந்த நிலவின் பயனையும் கொண்டாடுகிறாள் மாதவியாள்.

இதையே இளங்கோவடிகள் அழகுடன் பாடுகிறார்

"பான்மையின் திரியாது பாற்கதிர் பரப்பி
மீனரசு ஆண்ட வெள்ளி விளக்கத்து
இல்வளர் முல்லையொடு மல்லிகை யவிழ்ந்த
பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து
செந்துகிர்க் கோவை சென்றேந் தல்குல்
அந்துகின் மேகலை அசைந்தன வருந்த
நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியும் காதலற் களித்தாங்கு
ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங் கொண்ட மாதவி யன்றியும்............"

**கண்ணகி:**

மாதவியானவள் மனையகம் மறந்த கோவலனோடு கூடியிருக்க, கற்பின் வைப்பான கண்ணகியோ மனமுடைந்து உளம் உருகிய கோலத்தை அதே அந்திமாலையில் விளக்குகிறார் அடிகள்.

நீலோற்பல மலர்போலும் அழகிய கண்களையுடைய புகார் மகளிர் இன்பக் களித்துயில் கொள்ளும் அதே கங்குற் போழ்தில்,

கண்ணகியானவள் தன்னுடைய அழகிய சிவந்த கால்களில் சிலம்புகள் பூணாமல், மெல்லிடையைப் போர்த்த துகில்மேல் மேகலை அணியாமல், நெஞ்சில் குங்குமம் எழுதாமல், கோவலன் பூட்டிய தாலியே தவிர பிற அணிகலன்கள் ஏதும் துலங்காமல் கலங்கு-கிறாள். அழகிய குண்டலங்கள் நின்றாடும் அவளுடைய வடிந்த காதுகளில்கூட அணிநகை இல்லை. அவளுடைய ஒளிநிறை மதி முகத்தில் ஆங்காங்கே சிறுசிறு வியர்வைத் துளிகள் அரும்பா நிற்கின்றன. குடமலைப் பிறந்த குளிர்காவிரியில் நீந்தும் செவ்வாளை மீன்போலும் அவள் கண்களை, நெறிமுறை பிறழாச் சோழர்தம் திருவுடை வாளெனக் காட்டும் அஞ்சன மையும், அணியரிதாரமும் தீண்டவில்லை. பேரொளி சிந்தும் பவளமென்னும் அவளுடைய நெற்றி திலகத்தை இழந்து நின்றது. ஒளிசிந்தும் அவள் புன்னகையை இழந்து கோவலன் எங்கோ கிடந்தான். நடுயாம வேளையில் தோன்றும் இரவின் கருமை நிறம் அடர்ந்த அவளுடைய கூந்தல் நெய்யளைந்த கோலமற்றுக் கிடந்தது. கோவலன் தன்னை நீங்கியதால், கண்ணகி மொழியற்ற ஊமையாய். செயலற்ற நெஞ்சினளாய்க் கலங்குகிறாள்; உருகுகின்றாள். அடிகளின் வாய்மொழிப்படி, கையறு நெஞ்சத்தளாகக் கண்ணகி வீற்றிருக்கிறாள்; கொல்லருலையினில் ஊதும் குருகு போல் உயிர்த் தொடுங்குகிறாள்.

கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்லென்று வீழ்ந்த பாண்டிமாதேவியினும். கண்ணகியின் இந்த மாலைக்கால அவலநிலை மனத்தை உருக்கவல்லது. இவ்வற்புதமான துயர நெருடலை அடிகள் பாடும் விதந்தான் என்னே!

> "அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
> மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
> கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
> மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
> கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
> திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
> செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
> பவள வாணுதல் திலகம் இழப்பத்
> தவள வாணகை கோவலன் இழப்ப
> மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
> கையறு நெஞ்சத்துக் கண்ணகி யன்றியும் . . ."

**இறுவாய்:**

தத்தம் துணையொடு கூடிமகிழ்ந்த உயிர்களுக்குக் குளிர்ந்தும். கூடி மகிழ ஏதுவற்ற உயிர்களுக்கு வெம்மையுடையதாகவும் மாலைக் காலத்தே ஆங்குத் தோன்றிய வெண்ணிலா, வானத்தில் நின்று ஒளி சிந்தியது எனறு அடிகள் கூறி முடிக்கின்றூர். முகையவிழும் கங்கு லாகிய பொழுது இன்பநிலையை மாதவிக்கும், துன்பநிலையை கண்ணகிக்கும் கொடுத்தற் பொருட்டு வானத்தில் ஊர்ந்து செல்லும் மதியாகிய குடையை விரித்தது என்று விளக்குகிறூர் அடிகள். இவ்வரிய நுண்ணுணர்வினை இளங்கோவடிகள் பாடும் திறம் போற்றற்குரியது

''கூடினூர் பானிழலாய் கூடார்பால் வெய்யதாய்
காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே—கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்கும் கங்குற் பொழுது''

வாழ்க தமிழ் !

# தமிழுக்கு மாற்றம் தேவையா?

ந. நடராஜபிள்ளை, M.A.,
மைசூர்.

மொழி, நம் கருத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள உதவும் கருவி, சிறந்த, தெளிந்த முறையில் கருத்தை வெளியிடச் சிறந்த கருவி தாய்மொழியே. பிறமொழிச் சொற்களால் புரிய வைக்க இயலாத நிலையில் தாய்மொழி கைகொடுப்பது கண்கூடு. எனினும் காலத்திற்குத் தகுந்தாற்போல் மொழி மாற்றம் அடைந்து வருவது தவிர்க்க இயலாத ஒன்று. தமிழ்மொழிவரலாற்றை நோக்கும் போது, இம்மாற்றம் எளிதில் விளங்கும். மொழியில் ஏற்படுகின்ற பல கிளைமொழிகளுக்குக் காரணம் இம் மாற்றங்களே!

இவ்வாறு தனக்குள்ளேயே மாறிக்கொண்டு வருகின்ற மொழியில், பிறமொழிச் செல்வாக்காலும் (influence) மாற்றங்கள் ஏற்படுகின்றன. தமிழக அரசியலில் சமஸ்கிருதம் கொண்ட பங்கினால்தான் தமிழில் இவ்வளவு சமஸ்கிருதச் சொற்களைக் காண முடிகிறது. சமஸ்கிருதத்தின் தொடர்பால்தான், இத்தனை திராவிடமொழிகள் கிளைத்தன என்பது மறுக்க முடியாத உண்மை. என்றாலும், தமிழில் சமஸ்கிருதம் ஏற்படுத்திய மாற்றம், ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ, ஸ்ரீ போன்ற எழுத்துக்களின் தோற்றமும், ஏராளமான சொற்களுமே.

ஆனால், சீரிளமைத் தமிழ் இம்மாற்றங்களைத் தாங்கியும், தன்னளவில் அதிக மாற்றம் காட்டாமல் வாழ்ந்து வருவது தமிழின் சிறப்பைக் காட்டும். புதிய புதிய சொற்களைத் தோற்றுவிக்கின்ற தன்மையை எப்போது மொழி இழக்கின்றதோ அப்போது அது சாகத் தொடங்குகிறது என்று பொருள். உண்மைதான். கால மாற்றத்திற்குத் தகுந்தாற்போல் மொழியில் சொற்கள் தோற்றுவிக்கப்படவேண்டும்.

உலகநாடுகளிடையே, பண்பாட்டு, பழக்கவழக்கத் தொடர்புகள் பெருகி வரும் இந்நாளில் மற்ற மொழிகளில் ஏற்படுத்தப்படுகின்ற புதிய புதிய சொற்களுக்கு நேரான சொற்களைத் தோற்றுவிக்க வேண்டும். இல்லையெனில், அச் சொற்களையே ஏற்றுக்

கொள்ள வேண்டியது வரும். எல்லா மொழிகளுக்கும் தோற்றுவிக்கும் திறன் உண்டு எனினும், மற்ற மொழிச் சொற்களையும் மாற்றங்களோடு ஏற்றுக் கொண்டும் உள்ளன.

'திரிசொற்கள்' என்றும், 'திசைச்சொற்கள்' என்றும் நம் முன்னோர் வகுத்திருப்பதன் நோக்கமே, காலச் சூழலில் நாம் மற்ற மொழிச் சொற்களையும் பயன் கருதி, தேவையான இடங்களில் ஏற்றல் வேண்டும் என்பதனாலேயே.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே" —நன்னூல்

என இலக்கண நூலார் புறனடை ஆக்கியதும் காலச்சூழ்நிலை மாற்றங் கருதியே.

மொழியில் மாற்றங்களை அப்படியே, ஏராளமாக ஏற்றுக் கொள்வது நல்லதா, அல்லது ஒரேயடியாக ஒதுக்கிவிடுவது நல்லதா எனச் சிந்தித்தல் வேண்டும். ஏற்றுக் கொள்வதால் விளையும் நன்மை, தீமைகள், ஒதுக்கி விடுவதால் விளையும் நன்மை, தீமைகள் ஆகியவற்றை நுணுகி ஆராய்ந்து செயல்படுவது மொழி வளர்ச்சியில் நாட்டமுடையோரின் கடமையாகும்.

வேற்றுமொழிச் சொற்களில் தேவையான மாற்றம் செய்து ஏற்றுக் கொள்ளலாம் என்பது தொல்காப்பியர் தொடங்கி, எல்லா இலக்கண, மொழியியல் ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்ட ஒன்று. அதனால்தான், ஜமீன்தார், சரக்கு, சர்க்கார், ஜமக்காளம், குமாஸ்தா, குங்குமம், பங்கஜம், உருத்திரன், ஜன்னல், சாவி போன்ற எண்ணிறந்த வேற்றுமொழிச் சொற்கள், தமிழ்ச் சொற்களாகவே, நம்மிடையே பண்டை நாளிலிருந்து உலவி வருகின்றன.

அதே வேளையில், ஊர்ப்பெயர்களிலும், மனிதர்களின் பெயர்களிலும் மாற்றம் செய்ய வேண்டுவது அவசியந்தானா? திருவல்லிக்கேணி, டிரிப்ளிகேன் (Triplicane) தூத்துக்குடி, டூடுகுரின் (Tuticorin), திருநெல்வேலி, டின்னவேலி (Tinneveli) என்று மாறியதற்கு வருத்தமுறும் நாம், ஷேக்ஷ்பியரை, செகப்பிரியர் என்று மாற்றலாமா?

'ஷேக்ஷ்பியர்' என எழுதுவதால் மொழிக்கு என்ன தீமை வந்துவிடப் போகிறது? நமது பள்ளிகளில் ஷ, க்ஷ, ஸ, ஜ, ஹ போன்ற எழுத்துக்களை 'வடமொழி எழுத்துக்கள்' என்று கற்பிக்கிறோம். அவ்வாறிருக்க, 'ஷேக்ஷ்பியர்' என்றே எழுதினால் என்ன?

'பஸ்'ஸை 'பேருந்து' என்றும், 'சைக்கிளை' 'மிதிவண்டி' என்றும் மாற்றி வருகிறோம். போற்றத் தகுந்த ஒன்றுதான். எவ்வளவுக் கெவ்வளவு நாம் மொழியில் புதிய சொற்களை உருவாக்குகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு மொழியில் வளர்ச்சி ஏற்படும் என்பது மறுக்க முடியாத உண்மை. 'ரயிலை' நாம் 'புகை வண்டி' என்று சொன்னாலும் 'ரயில்' என்ற சொல்லே பழக்கத்தில் அதிகமாக உள்ளது.

ஸ்கூட்டர், ஸ்புட்னிக் போன்றவைகளுக்குப் புதிய சொற்களை ஏற்படுத்த முடியும் எனினும், அதுவரைக்கும் நாம் எவ்வாறு எழுதுவது? பஞ்சாபி, ஹிந்தி போன்ற சில மொழி பேசுபவர்கள், 'இஸ்கூட்டர்' 'சக்கூட்டர்' என்றும் சொல்வதைக் கேலிசெய்யும் நாம் எப்படி எழுதப் போகிறோம்?

மொழியில், புதுமையாக்கம் (modernization) தவிர்க்க முடியாத ஒன்று. அதனால்தான் தொல்காப்பியர்கால அரிச்சுவடி போதாதென்று, ஜ. ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களை நம் முன்னோர் சேர்த்தனர்.

நம் மொழிக்கு நம்முடைய அரிச்சுவடியே போதுமானது. ஆனால், ஸ்கூட்டர், ஸ்புட்னிக் போன்ற அயல்மொழிச் சொற்களுக்கு வடமொழி எழுத்துக்களைப் பயன்படுத்தலாம்.

சொற்களின் முதல் எழுத்தாக 'F' 'b' 'g' 'ḍ' 'd' வரும் பெயர்களை எவ்வாறு எழுதுவது? இவற்றுக்காகப் புதிய எழுத்துக்களைத் தோற்றுவிக்க வேண்டியது இல்லை. ஏனெனில், அது நம் மொழிக்குத் தேவையில்லாதது. 'துக்ளக்' பத்திரிக்கையில் எழுதுவது போன்று, 'Fான்' என்று அந்த அந்த எழுத்துக்களையே எழுத வேண்டும் என்ற நியதியுமில்லை. சில குறியீடுகளைப் (symbols) பயன்படுத்துவது போதுமானது.

'F' எழுத்துக்காக 'ஃப' என எழுதுவதை நாம் அறிவோம். தமிழில் ஆய்த எழுத்து மொழிமுதலில் வாராது என்று இலக்

கணத்தில் கூறியிருந்தாலும், ஆய்த எழுத்தின் பயன் குறைந்து விட்ட இக்காலத்தில் மொழி முதலில் எழுதிப் பயன்படுத்தினுல் அது தவருகாது. 'புதியன புகுதல் வழுவல : கால வகையினுனே''.

மேலும், எஃகு, க∴சு என்றவிடங்களில் '∴' எழுத்து, க, ச போன்ற வல்லின எழுத்துக்களை மென்மைப்படுத்துகிறது என்பது நம் பண்டை இலக்கணத்தின் வாயிலாகவே நாம் அறிந்த ஒன்று. முன்னர் மொழி இடையில் மட்டுமே பயன்படுத்தினர். இப்போது, பயன்கருதி, மொழி முதலிலும் பயன்படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்துவதால், மொழியில் எந்தவிதக் கேடும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. மாருகத் தமிழில் 'F' ஒலியை எழுத இயலாது' எனக் குறை கூறி மகிழ்வோரின் குற்றச்சாட்டையும் நீக்கலாம்; 'Fான்' போன்று எழுதும் மொழிச் சீர்குலைவையும் தடுக்கலாம்.

மேலும், ஒலிப்புத் தடையொலிகள் (voiced stops) என்று சொல்லப் படுகின்ற எழுத்துக்கள் (க, ட, த, ப, g, ḍ, d, b) போன்றவை மொழி முதலில் வரும்போது, அவற்றிற்கெனச் சில குறியீடுகள் தேவைப்படுகின்றன. 'எழுத்து' போன்ற பத்திரிக்கைகளில் பயன் படுத்திய முறையையே நாம் பயன்படுத்தலாம். அதாவது :க = 'g'; :ப = 'b' :த = 'd' :ட = 'ḍ' என்ற குறிகளோடு பயன்படுத்தலாம்.

இவ்வாறு எழுதுவதால், மொழியின் அரிச்சுவடியில் மாற்றம் ஏற்படப் போவதில்லை. இருப்பதை வைத்தே இல்லாதவற்றை உருவாக்குகிறோம். துணையெழுத்துக்களாகிய 'ா', 'ெ', 'ே' போன்றவற்றின் (allograph) வரிசையில் [:] என்ற ஒன்றும் சேருகிறது. அவ்வளவே!

> ''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே''

என்பதனுல், தொல்காப்பியர் காலத்திலும் 'கடன்வாங்கல்' இருந்தது என்பது புலப்படும். இவ்வாறு வேற்று மொழிச் சொற்களை இலக்கணம் அனுமதித்த போதிலும், குறைவாகவே அக்காலப் புலவர் பெருமக்கள் பயன்படுத்தினர். காலம் செல்லச் செல்ல, அரசியல் செல்வாக்காலும், அயலார் இடையீட்டாலும், பிற மொழிக் கலப்பு அதிகமாகிக் கொண்டே வந்தது. தற்காலத்தில் தனித்தமிழ் உணர்ச்சி பெருகியிருந்தாலும், பிறமொழிச் சொற்களை ஒரேயடியாகத் தள்ளிவிடுதல் என்பது இயலாத ஒன்று.

மொழிகளுக்கிடையே சொற்கள் மட்டும் கடன் வாங்கப் படுவதில்லை. கருத்துக்களும் கடன்வாங்கப்படுகின்றன இலக்கியங்கள் வளர, கருத்துக்கடன் மட்டுமல்ல; மொழிபெயர்ப்பும் தேவைப்படுகின்றது.

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனைமர பினவே'' – தொல்;

என்றமையால், பழங்காலந் தொடங்கியே மொழிபெயர்ப்பு இருந்து வந்தது விளங்கும்.

மொழிபெயர்ப்பு மொழியில் வளத்தை மிகுதிப்படுத்த உதவும் தலைசிறந்த அம்சங்களுள் ஒன்று. இம் மொழிபெயர்ப்புக் கலையை நோக்கின், மேற்சொன்ன எழுத்துச் சீரமைப்பு எவ்வளவு இன்றி யமையாதது என்பது புலப்படும்.

மொழிபெயர்க்கும்போது, எவைகளை மொழிபெயர்க்க நமக்கு உரிமை உண்டு என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுவது மிக அவசியம்: இடப்பெயர்களையும், மனிதர்களுடைய பெயர்களையும், டிராம் ஸ்புட்னிக் போன்றவைகளையும் சிதைக்காமல் அப்படியே எழுதுவது சாலச்சிறந்தது. அதனுல் அவைகளுடைய இயல்பு (originality) மாறுமல் காப்பாற்றப்படுகின்றன.

மொழிப்பெயர்ப்பாளனுக்கு ஏராளமான சொற்கள் தேவைப் படுகின்றன. அப்போது அவன் தானுகவே பல புதிய சொற்களைப் படைக்கிருன். 'ஒலியன்' (phoneme), உருபன் (morpheme), உரு பொலியன் (morpho phoneme) போன்ற பல புதிய சொற்கள் மொழியியல் வளர்ச்சியினுலும், 'ஏவுகணை', 'நிலாவூர்தி', 'எக்ஸ் கதிர்' போன்ற பல சொற்கள் அறிவியல் வளர்ச்சியினுலும் ஏற் பட்டிருப்பதைக் காண்கிறேம்.

இவ்வாறு படைக்குங் காலத்து, அச்சொற்களின் இயல்பும், எளிமையும், வலிமையும் தமிழின் தனித்தன்மைக்கு அழகூட்டுவ தாகவும், வளஞ்சேர்ப்பதாகவும், நீண்ட நெடுங்காலம் நமது மொழியில் இருந்ததுபோலவே உள்ள உணர்ச்சியை உடையதாகவும் இருக்க வேண்டும்.

தமிழின் சிறப்பெழுத்தாகிய 'ழ்'வை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்க முடியாது. எனினும், இயன்றவரை, அதை ஒலிக்க முடிந்

தால் அது சிறப்புத்தானே! அவ்வாறே, மற்ற மொழிகளிலுள்ள சிறப்பு ஒலிகளை நாமும் பயன்படுத்த முடிந்தால் அதில் தவறில்லை. மாறாக நமக்கு அது சிறப்பே. அதிலும், நாம் பயன்படுத்தப் போவது கடன் வாங்கும் சொற்களில் மட்டுமே, அதிலும் குறிப்பாக, இட, மனிதப் பெயர்களில் மட்டும்தான்.

# மேனாட்டு நாகரிகமும் இந்திய நாகரிகமும்

கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்

முன்னைய நிலை:

பரத கண்டத்தின் மேற்குள்ள நாடுகளின் நாகரிக நிலையைக் குறித்தது இக்கட்டுரை என்றாலும், ஏனைத் திசை நாடுகளின் நிலையையும் வேண்டுமிடத்துச் சிறிது விரவிக் கூறும்.

நாம் சரித்திர வாயிலாக பேனாடுகளைப் பற்றி வேண்டுமளவு அறிந்திருக்கின்றோம். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகள் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கல்வி அறிவு ஒழுக்கம் தொழில் முதலியவற்றில் மிகக் கீழ்நிலைப்பட்டிருந்தன. அப்பொழுது உரோமா, கிரீசு முதலிய சில நாடுகள் மட்டும் சிறிது நாகரிகம் பெற்றிருந்தன என்பது சரித்திர நூல்களால் 'அறியப்படுகின்றது. அந்நாடுகள் கல்வியையும் கைத்தொழிலையும் கலைகளையும் வளம் படுத்தி வந்தன. யவனம் (கிரீசு) சீனா என்பவை கல்வியினும் கைத்தொழில்களிலும் மருத்துவத்திலும் தேர்ச்சி அடைந்திருக்கின்றன. அந்நாடுகள் இந்தியாவுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தன. பாரசீகமும் முற்காலந்தொட்டே நாகரிகத்தில் சிறந்து விளங்கியது. 'பாரசீய யவாநிகா' என்பது குராசானி என்னும் மருந்தின் பெயராக வழங்கப்படுவதனால், இந்தியாவுக்குப் பாரசீக நாட்டுடன் தொடர்பு இருந்தது என்பது விளங்கும். தமிழ்ச்சொற்கள் சில யவனம், சீனம் முதலிய நாடுகளில் சிறிது திரிந்து வழங்குவதாக ஆராய்ந்தறியப்பட்டிருப்பதனால், இந்தியாவுக்கும் பிறநாடுகள் பலவற்றுக்குந் தொடர்பு நிகழ்ந்தது என்பது பெறப்படும்.

இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகள் அக்காலத்து, முற்கூறிய நாடுகளைவிட இழிவான நிலையில் இருந்தன. காடுகளும் காடு சார்ந்த இடங்களுமே அங்கு மிகுதியாக இருந்தன. ஆகவே, மக்கள் காட்டு விலங்கினங்களைப் போலவே அறிவையும்

ஒழுக்கத்தையும் வளம்படுத்தாது வாழ்ந்தனர். உணவு துயில் புணர்ச்சிகளிலும் அவர்கள் விலங்கியலேயே மேற்கொண்டனர். அந்நாட்டு மக்கள் என இக்காலத்துக் கருதப்படுபவர் அந்நாட்டில் குடிபுகுந்தவரேயாவர் என்பது சரித்திர வாயிலாக உணரப்படும். கிரைத்தவமதத் தோற்றத்தின்போது அந்நாடுகளில் மக்கள் வாழ்ந் தனர் என உறுதியாகக் கூறுவதற்குத்தக்க சான்றுகள் இல்லை. அந்நாட்டு மக்களிற் பெரும்பாலாரும் கிரைத்தவராகக் காணப் படுவதனுல், அவர் தம் முந்தையோர் மத்திய ஆசியாவில் நின்றும் ஆங்கு நேரே குடியேறியவர் அல்லர் எனக் கருதுவதற்கு இட முண்டு. அன்றேல், அவர்கள் தமக்கென எம்மதமும் இல்லாதிருந் தனர் எனவும் கிரைத்தவ மதம் அவரிடைப் பின்னர்ப் புகுந்தது எனவும் கருத வேண்டும். வாழ்க்கையின் ஒழுகலாறு இன்னது என்று உணராததொரு கீழ்நிலையில் அந்நாடுகள் இருந்த காலத்தே இந்தியா உயர்ந்த கல்வியும் சிறந்த நாகரிகமுமு தகுந்த பண்பாடும் பெற்று விளங்கியது. யவனம் முதலிய தேசங்கள் இந்தியாவொடு பிரயாணத்தொடர்பு வைத்திருந்தகாலத்து,இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்கள் அவ்விந்தியாவைக் குறித்து அறிந்ததே இல்லை எனில், அவற்றின் தொழிலும் நாகரிகமும் எத்துணைய என்பது தானே விளங்கும் அன்றே? மேனுட்டவர் சிறந்ததொரு நிலையை எய்தியது அவர்கள் இந்தியாவை அறிந்த பின்பே என்பதை ஒருவர்க்கும் மறுக்க இயலாது.

மேனுட்டார் இக்காலத்து, உலகம் வியக்கும் சிறந்த நாக ரிகத்தை எய்தியுள்ளனர். அவர்கள் இகவாழ்வு பரவாழ்வு என்னும் இரண்டில் இகவாழ்வின் இன்பத்தையே நோக்கமாகக் கொண்டு, அதனை எய்துவதற்குப் பலவாறு முயன்றனர். இந்தியர்கள் பர வாழ்வின்பத்தையே நோக்கமாகக் கொண்டு, இகவாழ்வின்பத்தை மட்டுப்படுத்தினர். அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றினை யும் வேண்டுமளவில் எய்திப் பின்னர்த் துறவை மேற்கொண்டு வீடுபேற்றை எய்துவதே இந்தியரது தலை சிறந்த நோக்கமாக இருந்தமையால், இயற்கைப் பொருளாராய்ச்சியில் ஆழப் புகுந்து அதனுற் கட்டுண்ணுது, அதனை நீக்கி உயிர்நலத்தை எய்தற் பொருட்டு, இயற்கையைக் கடந்த கடவுண்மையை நாடி உழைத் தனர். ஆகவே, இயற்கையின் வழியவாகிய தத்துவங்களை ஆராய்ந்து அவ்வளவில் இயற்கையாராய்ச்சியை நம்முன்னுேர் நிறுத்திக் கொண்டனர். அவர்கள் தத்துவங்களின் முடிவாகிய

மாயையை உணர்ந்து அதனை வென்று அதன்மேற்பட்ட கடவுண்மையை அடைய விழைந்தனர். அதன் பொருட்டு மனவடக்கம், பொறியடக்கம், புலனடக்க முதலாகத் தம்மையே(தம்மனத்தையே) உட்செறிக்கும் அடக்கு முறைகளில் அவர்கள் பயில்வாராயினர்.

மேனாட்டவரோ எனில் இயற்கையை ஆராய்ந்து தத்துவச் சேர்க்கைப் பொருள்களை விஞ்ஞானகலை நெறிகளால் பயன்படுத்த முற்பட்டனர். அவர்கள் தம்மை அடக்குவதற்கு மாறாகப் பிறரை அடக்கி ஆட்சி செலுத்த விரும்பினர். ஆட்சி, மேற்கோள், செல்வம், பெருமிதம் முதலியவற்றை நாடிக் கடவுண்மையை மறந்தனர். விலங்குகட்கும் தாவரங்கட்கும் உயிரில்லை என்ற அறியாமையை உடைய அன்னோர் மக்கட்கு உயிருண்டு என்று அறிந்தது மிக அண்மைக் காலத்தேயாம். மனவடக்கம், பொறியடக்கம் முதலிய நெறிகள் அவர்கள் அறிந்தனவேயல்ல. இந்தியரது யோக நெறிகளைச் சிறிது அறிந்து, பிற்காலத்தில் மனவடக்கப் பயிற்சியில் நுழைந்தவர்களும் அதனை உலகவின்பத்தின் பொருட்டே பயன்படுத்துவாராயினர். தொகுத்துக் கூறின், மேனாட்டார் உலகியல் ஒன்றையே நாடினர்; இந்தியர் கடவுளியலை நாடினர். மேனாட்டவர் உடனலம் ஒன்றே கருதினர்; இந்தியர் உயிர்நலங் கருதினர். இவ் வேற்றுமை, இக்காலத்து, மேனாட்டாரிடைக்காணப்படும் அளவிறந்த விஞ்ஞான கலையாராய்சிக்கும் போலிநாகரிகத்துக்கும் இந்தியரிடைக் காணப்படும் எல்லையற்ற அடக்க வொழுக்கங்களுக்கும் இறைப்பொருளை நாடுந் தூய மன்பான்மைக்கும் காரணமாயிற்று.

இந்தியரது உள்ளம், அடக்கம் தூய்மை அமைதி (திருத்தி) பொறுமை, நடுவுநிலைமை, அறிவு என்பவற்றுக்கு நிலைக்களமாவதற்கு ஏற்ற பண்பாட்டை அடையுமாறு பயிற்றுவிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இந்தியாவில் தோன்றிய — இந்திய செல்வமாகிய — வேதங்களும் நீதி நூல்களும் ஆகமங்களும் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். மேனாடுகளில் நீதிநூல்கள் அருகியிருப்பதற்கு, அந் நாட்டார் இயல்பாகவே நீதியுடையவராகையால் அவை அவர்க்கு வேண்டுவனவல்ல என்று காரணங்காட்டுவது நகைக்கூற்றே யன்றி பிறிது யாதுதான்?

இந்தியர் உலகவின்பத்தைக் குறிக்கோளாக உடையவரல்லரேனும், உலகநடை சிறப்பாய் இலங்குவதற்கு வேண்டும் உலகநெறிகள் பற்றிய ஆராய்ச்சியில் வல்லுநராகி அவற்றைக் குறித்த பல நூல்களும் செய்தனர். அவர்கள் ஆக்கிய அரசியல் நூல்கள் பொருணூல்கள் (economics) அறநூல்கள் முதலியவற்றுக்கு இணையான உயர்நூல்கள் எந்நாட்டிலும் பிறந்ததில்லை. மருத்துவம் சோதிடம் ஓவியம் சிற்பம் கல்வி இசை நாடகம் மந்திரம் முதலியவை பற்றிய நூல்களும், நிலவியற்கைநூல் உவநூல் தாவரநூல் மனையடிநூல் கணிதநூல் குறிநூல் வானநூல் விலங்கின்குறிநூல் போர்நூல் இறைநூல் அடிசில்நூல் கணுநூல் களவுநூல் பொறிநூல் (வர்மசாத்திரம்) மனத்தத்துவநூல் மணிநூல் (இரத்தினசாத்திரம்) வேதிநூல் (இரசவாதம்) மயக்கமருத்துநூல் இன்பநூல் வசியம் முதலிய எட்டுவகைச் சித்திநூல் முதலியனவும் இந்தியர் செல்வங்களாய் நிலவுகின்றன. இவற்றுள் மேனாட்டார் அறிந்திராத பல உண்மைகளும் உள என்பது வெளிப்படை. பூத்தொடுத்தல் முதலிய பொதுத் தொழில்களிலும் இந்தியர் கலைமணங்கமழ்ந்தது எனில், அவரது கலையுணர்ச்சி நுட்பத்தைப் பாராட்டாதிருக்க யார் முற்படுவர்?

ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் மேனாட்டார்க்கு எத்தகைய சிறந்த நூலும் இல்லை என அறிகின்றோம். அரசியலாட்சியில் அவர்கள் கருத்து முன்னின்றமையால், அது பற்றிய பல புரட்சிகளும் தோன்றின. அரசியலே கருத்தாக இருந்த அவர்களுடைய ஆராய்ச்சியும் அதற்கேற்ப அரசியல் வரலாற்றுக் கலையில் முதன்முதற் புகுந்தது. பின்னரே, அந்நாட்டில் ஏனைய கலைகள் சிறக்கலாயின. அதன்பின்னர்ச் சமூகச் சீர்திருத்தத்தில் மேனாட்டவரது உள்ளஞ் சென்றது. அரசியலும் சமூகமும் ஒரு சிறந்த நிலையை எய்தினல் அன்றி ஒருநாட்டில் எக்கலையும் தலைதூக்கமாட்டாது. மேனாட்டார் அவ்விரண்டிலும் சீர்திருத்தம் பெற்ற பின்பு விஞ்ஞானம் முதலிய கலைகளில் தேர்ச்சியுறலாயினர்.

மேனாடு பெரும்புரட்சிக்களமாக இருந்தமையால், அந்நாட்டவர் உள்ளம் உலோகவாராய்ச்சியில் புகத் தொடங்கியது. அதன்பயனாகப் பல்வகைப் போர்ப்படைகளையும் அவர்கள் கண்டுபிடித்தனர். அத்துடன் கொற்றொழிலும் சிற்பத்தொழிலும் அங்கு நன்கு இடம் பெறலாயின. அன்னாரது வரலாற்றின் இயல்பை ஆராயுமிடத்து அன்னார் கல்வியைவிடக் கைத்தொழில்களையே

கண்ணுகைக் கொண்டு பேணிவந்தனர் என்பது புலனுகும். இற்றை நாளிலும் அவர்கள் கைத்தொழிலையும் வணிகத்தையுமே சிறப்பாகக் கருதி வருவது கண்கூடு. ஒரு நாட்டின் உலகியல் முன்னேற்றத்துக்குக் கைத்தொழில் வணிகம் வேளாண்மை என்பனவே சிறந்த அடிப்படைகளாம். மேனுட்டார் வேளாண்மையிற் சிறப்புற்றது பிற்காலத்தேயாம் இயந்திரங்களைப் பயன்படுத்தி வேளாண் டொழிலைச் செய்யும் நிலைக்கு அவர்கள் அதில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

(தொடரும்)

# தும்பைத்திணை

டாக்டர் நா. செயராமன் எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.,
தமிழ்த்துறை, மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை-21

தொல்காப்பியர் புறத்திணையுள் நான்காவது திணையாகத் தும்பையைக் கூறுகிறார். வெட்சி ஆநிரை கவரும் போரையும், உழிஞை கோட்டை முற்றுகையையும், வஞ்சி படையெடுப்பையும் பொருளாகக் கொண்டமைபோல் தும்பை களப்போரைப் பொருளாகக் கொண்டதென்பர்.

'மைந்து பொருளாக வந்த வேந்தனைச், சென்று தலையழிக்கும் சிறப்பிற்று என்ப' என்று தொல்காப்பியர் தும்பைத்திணையை விளக்குவார். 'இருவரும் ஒருகளத்தே பொருவர்' என்று நச்சினார்க்கினியர் களத்தைக்குறித்துச் சொல்வார். நச்சினார்க்கினியர் கருத்தை அடியொற்றியே ஐயனாரிதனாரும், 'செங்களத்து மறம் கருதிப், பைந்தும்பை தலைமலைந்தன்று' என்று களத்தைச் சுட்டுகிறார்.

உயிரிழந்த யாக்கை நிலத்தில் வீழாது நின்று போரிடும் சிறப்புடையது என்று இத்திணையின் தனிஇயல்பைத் தொல்காப்பியர் விளக்குவதும் களப்போர் என்பதையே உறுதிப்படுத்துகிறது.

எனவே தும்பைத்திணை களப்போர்ச் செய்திகளை விளக்கும் திணை எனலாம். களத்தில் வெற்றி பற்றிய குறிப்பு வருமாயின் அது வாகைத்திணையின்பாற்படும். எனவே வெற்றி தோல்விக்கு முந்திய களச்செய்திகள் தும்பையில் பாடுதற்குரியன எனலாம்.

தொல்காப்பியர் பன்னிரண்டு துறைகள் கூறுவார்.

1) தானைநிலை
2) யானைநிலை
3) குதிரைநிலை
4) தார்நிலை
5) தலைவர்தபுதி
6) பெருமை
7) ஏமம்
8) களிறு எதிர்ந்தோர்பாடு
9) வாளோர் ஆடும் அமலை
10) தொகைநிலை
11) நல்லிசைநிலை
12) நூழில்

இப்பன்னிரு துறைகளோடு 11 துறைகள் சேர்த்து இருபத்துமூன்று துறைகள் கூறுவார் ஐயனாரிதனார்.

1) தும்பை அரவம்
2) தேர்மறம்
3) பாண்பாட்டு
4) முன்தேர்க்குரவை
7) தானைமறம்
8) வெருவருநிலை
9) சிருங்காரநிலை
10) உவகைக்கலுழ்ச்சி

5) பின்தேர்ந்தாவை 11) நூழிலாட்டு
6) பேய்க் குரவை

வெற்றி தோல்வி அடையுமுன்னர் உள்ள களச்செய்திகளைத் தொல்காப்பியர் கூற, ஐயனரிதனர் போர் முடிந்த பின்னர் நிகழ்பவற்றையும் சேர்த்துக் கூறுவது குறிக்கத்தக்கது.

தும்பைத்திணையில் அமைந்த புறப்பாடல்கள் 27. [புறம். 62,63, 80,87 ,88, 89,90, 273, 274, 275, 276, 277, 278, 283, 284,288,294,295,300,301,302,303,304,307,309,310,311]

1) குதிரை மறம்-புறம்273,299,302,303,304
2) எருமை மறம்,புறம் 80,274,275
3) உவகைக்கலுழ்ச்சி-புறம் 277,278,295
4) களிற்றுடனிலை-புறம் 307
5) தானைநிலை–புறம் 276.
6) தானைமறம்-புறம் 87,88,89,90,170,294,300,301
7) தொகை நிலை-புறம்.62,63
8) நூழிலாட்டு-புறம் 309,310.
9) பாண்பாட்டு-புறம் 260,284,311.

இவற்றுள் உவகைக்கலுழ்ச்சி, தானைமறம், நூழிலாட்டு, பாண்பாட்டு ஆகிய நான்கு துறைகள் தொல்காப்பியர் கூறுதிருக்கப் புறப்பொருள் வெண்பாமாலையைப் பின்பற்றிப் புறநானூறு கொண்டுள்ள துறைகளாம்.

இத்துறைகள் அனைத்தும் போர்க்களத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பனவாகவே உள்ளன.

தொகைநிலைத்துறை தவிர ஏனைய அனைத்துத் துறைகளும் போர்க்களத்தில் தனிப்பட்டோர் செயல்களையும் நிலையினையும் விளக்குவனவாக உள்ளன.

தொகைநிலைத்துறையில் இருபாடல்கள் உள. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேல்பல் தடக்கைப் பெருநற்கிள்ளியும் போரிட்டுக் களத்தில் வீழ்ந்துள்ள நிலையைக் கழாத்தலையாரும் பரணரும் பாடுகின்றனர். இவ்வாறு இரு பக்கத்து மன்னர்களும் ஒருங்கே இறந்துபடும்நிலை அரிதாகவே ஏற்படும். அதனைப் பாடத் தனித்துறை அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. இப்பாடல்களில் அழிவால் ஏற்பட்டுள்ள அவலநிலையே காட்டப்

படுகிறது. இப்பாடல் காஞ்சித்திணையில் இடம் பெற்றிருக்க வேண்டும். அல்லது இரங்கிப்பாடும் கையறுநிலைத் துறையில் இடம் பெற்றிருக்கவேண்டும். ஆயின் தும்பையில் தொகைநிலை எனத் தனித்துறையமைக்கக் காரணம் சிந்திக்கத்தக்கது.

அவ்வாறே உவகைக்கலுழ்ச்சி எனும் துறையும் வீரன் இறப்பைப் பற்றியதாக உள்ளது. இத்துறையில் மூன்று பாடல்கள் உள. (புறம் 277, 278, 295) வீரப்போர் செய்த வீரனது தாயின் மகிழ்ச்சியை விளக்குவனவாக இவை உள. பெண்ணின் வீர உள்ளம் எனக்கொண்டால் இவற்றை மூதின்முல்லை எனலாம். இதே அமைப்புடைய பாடல் மூதின்முல்லை என வகுக்கப்பட்டுள்ளது. (புறம்.279) அவலம் எனக்கொண்டால் காஞ்சித்திணையிலோ பொதுவியலிலோ ஆனந்தப்பையுள், மூதானந்தம், கையறுநிலை ஆகிய துறைகளோடு வைப்பதே முறை எனத் தோன்றுகிறது. உணர்ச்சியை நோக்காது நிகழும் இடமான களத்தை நோக்கித் தும்பை என வகுத்துள்ளனர்.

அதுபோன்றே 'களிற்றெடுபட்ட' வீரனது இறப்பைப் பாடும் களிற்றுடனிலைத்துறையும். (புறம். 307)

தொகைநிலை, களிற்றுடனிலை, உவகைக்கலுழ்ச்சி மூன்று துறைகளும் அவல உணர்வைக் கொள்வன. பாடலின் உணர்ச்சி, பாடப்படும் பொருள் ஆகியவற்றைக் கருதாமல் பாடப்படும் நிகழ்ச்சி, நிகழும் இடம், போர்க்களம் என்பதால் இத்துறைகளைத் தும்பைத் திணையில் சேர்த்துள்ளனர்.

ஏனைய துறைகள் போர்க்களத்தில் தனிப்பட்டோன் செய்யும் வீரச்செயல்கள், போர்நிலைகள் ஆகியவற்றைப் பேசும்.

வீரரின் போர்ச் செயலைப் பாடும் துறைகளாகத் தானைநிலை, தானைமறம் இரண்டும் உள. புறநானூற்றுள் ஒரு பாடல் தானைநிலை என்றும் (புறம்.276) எட்டுப்பாடல்கள் [புறம் 87, 88, 89, 90, 170, 294, 300, 301] தானைமறம் என்றும் கூறப்படும்.

தானைநிலை, தானைமறம் என்னும் இருதுறைகளுக்கும் வேறுபாடு அதிகம் காணப்படவில்லை.

'தாம்படைத்தலைக் கொள்ளாமை, ஓம்படுத்த உயர்பு கூறு' வது தானைமறம். (பு. வெ. மாலை. 129) 'இருபடையும் மறம்

பழிச்சப், பொருகளத்துப் பொலிவெய்தின்று' (பு.வெ.மாலை.148) என்று தானைநிலை விளக்கப்படும். தானை மறத்துக்கு வேறிரு விளக்கங்களும் கூறப்படும்.

ஆயின், புறநானூற்றுப் பாடல்களை நோக்கும்போது படை வீரன்சிறப்பைப் பேசுவது இவ்விருதுறையின் பொருளாகத் தோன்றுகிறது.

தொல்காப்பியர்,
'தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகைநிலை'

என்று கூறுகிறார். புறப்பொருள் வெண்பாமாலையார் தானைமறம், யானைமறம், குதிரைமறம் என்று அதனை மூன்றாகப் பிரித்துக் கூறியுள்ளார். இந்நிலையில் தானைக்குமட்டும் தனிச் சிறப்பளித்துத் 'தானைநிலை' என்று ஒன்று வகுத்துள்ளார் ஐயனாரிதனார். அதனைப் பின்பற்றிப் புறநானூறு தொகுத்தோரும் இருதுறைவகுத்துள்ளனர்.

அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடும் 4 பாடல்கள் (புறம்.87,88,89,90) இத்துறையைச்சாரும். ஒரு பாடலில் பிட்டங்கொற்றனைத் தாமோதரனார் பாடுகிறார். (புறம் 170) ஏனைய நான்கு பாடல்கள் பெயர் தெரியாத வீரனைப் புகழ்கின்றன. (புறம்.276,294,300,301). போர்க்களத்தில் தனிவீரன் செயலைப் பாடுவன எனும் அடிப்படையில் இவை தானைநிலை, தானைமறம் என வகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

தொல்காப்பியர்,
'ஒருவன் ஒருவனை உடைபடைபுக்குக்
கூழை தாங்கிய பெருமையும்'

(தொல் புறத்திணை இளம்.72)

என்று ஒருதுறை கூறுகிறார். இதற்குக் 'கூழை தாங்கிய எருமையும்' என்ற பாடபேதமும் காணப்படுகிறது. எருமை என்ற பாடம் கொண்ட நச்சினார்க்கினியர் 'கடாப் போலச் சிறக்கணித்து நிற்கும் நிலைமை' என்று விளக்குவார்.

எருமை, பெருமை எனும் இரண்டில் பெருமை என்ற பாடமே ஏற்புடையதாகும். வீரனது சிறப்புக்கு எருமையை உவ

மையாகக் கூறினர் என்றோ, அத்தகைய உவமையையே துறைப் பெயராகக் கொண்டார் என்றோ கொள்வது பொருத்தமாக இல்லை.

எனவே பிழைபட்டபேதத்திலிருந்து பிறந்ததே 'எருமை மறம்' என்ற துறைப்பெயரெனலாம். இத்துறைக்குப் புறப் பொருள் வெண்பாமாலையார் 'சினம் கொண்டு பெயர்படைக்குப் பின் நிற்றலைப் பொருளாக விளக்குவார். அதுபோன்றே ஏமம் என்று தொல்காப்பியர் கூறியதை ஏம எருமை என்று விளக்குகிறார் ஐயனாரிதனார். (பு வெ.மாலை 140)

இலக்கணிகள் வேறுபொருள் கூறியபோதிலும் தானைமறத்துக்கும் இதற்கும் வேறுபாடு கருதாமல் துறைவகுத்துள்ளனர் புறநானூறு தொகுத்தோர். புறநானூற்றுப் பாடல்களுக்குத் (புறம்.80.271, 275)தனிப்பட்ட வீரனின் போர்ச்செயலைப் பாடுவது எனும் பொருளே பொருந்துவதாக உளது.

போர்ப்படைப் பிரிவுகளுள் ஒன்றான குதிரைப்படை வீரனின் சிறப்பினைப் பேசுவது குதிரைமறம் ஆகும்.

'தானை, யானை, குதிரை என்ற நோனார் உட்கும் மூவகை நிலை' என்று தொல்காப்பியர் கூற, ஐயனாரிதனார் தேரையும் சேர்த்துத் தானைமறம், யானைமறம், குதிரைமறம், தேர்மறம் என்ற நான்கினைக் கூறுவது குறிக்கத்தக்கது.

குதிரைமறம் புறப்பாடல் ஐந்திற்குத் துறையாக வகுக்கப் பட்டுள்ளது (புறம்.273, 299, 302, 303, 304) ஐந்திலும் குதிரை பற்றிய செய்தி கூறப்படுகிறது. குதிரையின் திறம் பாடலில் இடம் பெற்றாலும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வது குதிரைமறவனது செயலேயாகும்.

தொல்காப்பியர் நூழில் என்று மட்டும் கூற, ஐயனாரிதனார் நூழில், நூழிலாட்டு என இரண்டாகப் பிரித்து வேற்படைச் செய்தியைப் பாடுவனவாக விளக்குவார். [பு.வெ.மாலை. 141, 142] நூழிலாட்டு எனும் துறையில் இருபாடல்கள் உள. [புறம்.309, 310] ஒரு பாடலில் வேல் பற்றியும் (புறம்.309) மற்றொரு பாடலில் அம்பு பற்றியும் (புறம்.310). செய்திகள் உள. இருபாடல்களும் வீரனின் திறத்தைப் பாடுவனவாக உள்ளன.

பண்பாட்டு எனும் துறை தொல்காப்பியத்தில் இல்லை. பாணர் களத்தில் வீழ்ந்தார்க்குப் பாடல் இசைத்துக் கடன் செய்தல் பாண்பாட்டு என ஐயனாரிதனார் விளக்குவார்.

பாணனிடம் இறந்துபட்ட வீரன்சிறப்பை உரைப்பதாக ஒரு பாடல் உளது. (புறம்.260) அது கையறு நிலை என்றும் கூறப் பட்டுள்ளது. அப்பாடலைக் கையறுநிலை எனக் கொளலே பொருத் தம். பாடலில் 'பாண' என்ற விளியைப் பார்த்து ஆற்றுப்படைச் செய்தி இல்லாததை உணர்ந்து பாண்பாட்டு எனக் கூறி விட்டனர் போலும்!

ஏனைய இருபாடல்களும் (புறம் 283, 284) பாண்பாட்டுக்கு ஐயனாரிதனார் கூறும் விளக்கத்திற்கேற்ப அமையவில்லை. ஒன்று (புறம்.284) வஞ்சிக்கு உரியதெனத் தொல்காப்பிய உரையாசிரி யரால் விளக்கப்படும். மற்றொரு பாடலில் தும்பை என்ற சொல் வருவதால் இத்திணையில் அடக்கினர் போலும்! பாண்பாட்டு என்ற துறைப்பகுப்பு பொருந்துமாறில்லை அவைகளைப் பாடு பொருள் நோக்கி வேறு துறைகளில் சேர்ப்பதே பொருத்தம்.

பதிற்றுப்பத்தில் இரு பாடல்கள் தும்பைஅரவம் எனும் துறைக்குரியனவாகக் கூறப்படும். (பதிற். 34,83) ஒருபாடலில் 'பெருஞ்சமம்ததைய ஆர்ப்பெழ' என்று இருப்பதால் தும்பை அரவம் என்று வகுத்துள்ளனர். (பதிற்.34) மற்றொரு பாடலில் 'செலவு பெரிதினிது' எனும் குறிப்பிருப்பதால் அத்துறைக்குரிய தெனக் கூறியுள்ளனர்.

## மதிப்புரை

நூல் : தமிழ் மொழி வரலாறு
ஆக்கியோர் : கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்
வெளியீடு : செந்தமிழ் நிலையம்-நாகர்கோவில்-2
விலை : ரூ. 3.50

இற்றை நாட்களில் வரலாற்று ஆசிரியர்களேயன்றி, மொழி இயலாரும் தமிழ் மொழியின் வரலாற்றை ஆய்ந்து வருகின்றனர். ஆய்வுச்செய்திகளும், புதிய விளக்கங்களும், ஒப்புமைக் கருத்துக் களும் வளர்வதற்கேற்ப மொழிவரலாற்றுப் படைப்பிலும் மாறுதல்கள் காணப்படுகின்றன. நாஞ்சில் நாட்டு நாவலர் கவிராச பண்டித இராமசுப்பிரமணியம் அவர்களின் இந்நூலும் மொழி வரலாறு பற்றிய பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய சிறந்த நூலாகும். செய்திகள் அனைத்தும் சுருங்கிய அளவில் மொழித்தோற்றம், எழுத்து, நெடுங்கணக்கு,' கிளைமொழிகள்' யாப்பியல், தனித்தமிழ், வடமொழிக்கலப்பு, ஆரியர், இலக்கியம் என்றின்ன தலைப்புகளில் நிரல்பட அமைந்துள்ளன. பாரம்பரியத்திற்கு இடங்கொடாமல், புராணிகத்தன்மை இன்றி மொழித்தோற்றத்தினை ஆசிரியர் ஆய்கின்ற முறை பாராட்டத்தந்தது. "மொழி கடவுளால் உண்டாக்கப்பட்டது என்னுங் கொள்கை அறிவுக்குச் சிறிதும் பொருத்தமானது அன்று" என்பதே அக்கருத்து. ஒவ்வொரு மொழியின் தோற்றத்திலும் ஒலிவடிவம் வரிவடிவமானது எப்படி என்பதை மட்டும் அந்தந்த மொழிநூல்கள் தெளிவாகக் கூறுவதில்லை. மொழித்தோற்றத்தைப் பற்றி ஆய்வதில் அஃது ஒரு சிக்கலான பகுதி. "மக்கள் உணர்வு மிகுந்தவர்களாதலால், அவ்வொலிகளை வேண்டுமாறு இணக்கிக் கொண்டதும் கருத்தைப் புலனுக்க முயல்வர். அம்முயற்சியும் மக்கள் தோன்றிய" சின்னளிலே தோன்றியிருக்கும். அதுவே மொழி தோன்றிய காலம்! ஆனல் மொழியின் தோற்றத்தைப்பற்றி ஆராய்கின்ற சி. எல். பார்பர் என்பார் 'The story of language' என்ற நூலில், ஒலிவடிவத்திற்கும் வரிவடிவத்திற்கும் இடை யில் அடையாள எழுத்துகள் (hieroglpyhic) குறியீட்டு எழுத்துகள் (hieratic) என்ற இரண்டு நிலைகளைச்சுட்டிக்காட்டுவர். மறுபதிப்புகள் வரும்போது நாவலர் அவர்கள் இதுபற்றி விரிவாக எழுதின் நன்று.

''அகத்தியர் வருமுன்னே தமிழ் நாட்டில் தமிழ் முதன்மை பெற்று விளங்கியது என்பது உய்த்துணரப்படும்'' என்ற கூற்று பாராட்டத் தக்கது. தனித்தமிழ்பற்றிய உணர்வு மலிந்திருக்கும் இற்றை நாட்களில் 'நயமும் சுவையும், பிறவும் குறைபடாத, பிறமொழிச் சொற்களைத் திரியாமலே வழங்கலாம்' என்ற கூற்றும், ''ஒரு மொழியில் பிறசொற்கள் புகுவதை விலக்குவது எளிதன்று'' என்பதும் மொழிபியல்பு உணர்ந்த இந்த ஆசிரியரின் நேரிய கருத்துகளாகும். ஈசான தேசிகரின் கூற்றை எடுத்துக்காட்டி, 'இவர் நாணம் இன்றித் தமிழ் கற்றதே வியக்கற்பாலது' என்று எள்ளி நாவலர் நகையாடுவர். 'ஊசிமுறி' பாடலுக்குரிய விளக்கமும், இலக்கியம் என்ற பகுதியில் வரும் பல்சுவை பொருந்திய மேற்கோள் பகுதிகளும் பயின்று பாராட்டத்தக்கன. விழுமிய நடையும், கருத்துச்செறிவும் கொண்டிலங்கும் இந்நூலில் அச்சுப் பிழைகள் இல்லை. ஆயினும் பக்கம் 8ல் தொல்காப்பிய மேற்கோள் 'விழிப்பத்தோன்ரு' என்றும், பக்கம் 153ல் 'நூல்களை ஆராய்ந்து' என்ற சொற்றொடர் 'நூல்கள் ஆராயப்பட்டு' என்றும் இருக்க வேண்டும்.

இராவணன் இசைக்கலையில் வல்ல தமிழ்மன்னன் என்பதே இற்றைநாளைய அறிஞர் கருத்து. அரக்கர் என்ற இனம் வாழ்ந்ததாகவும், அவ்வினத்தையே சார்ந்தவன் இராவணன் என்றும் சொல்லும் நாவலர் அவர்களின் கருத்து மேலும் ஆய்தற் குரியது. தமிழ் கூறும் நல் உலகமும் குறிப்பாக இலக்கியத்தை விருப்பப்பாடமாகப் பயிலும் மாணவர் உலகமும் எளிய விலையில் வந்துள்ள இந்நூலால் பெரும்பயன் அடையலாம்.

—பழநி. அரங்கசாமி

# செய்திக் கதிர்

## பம்பாயில் தமிழ்த் தொண்டு

மொழி பெயர் தேயத்தில் வாழ்ந்தாலும், தாய்மொழியை மறவாத அன்பும், தளராத தொண்டு உள்ளமும் வெகு சிலருக்குத் தான் உள்ளன.

'சாவில் தமிழ்படித்துச் சாக வேண்டும்–எந்தன்
சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்'

என்பதுவே அவர்தம் குறிக்கோளாக இருப்பது கண்டு நாம் மகிழ்கிறோம். பம்பாய்த் தமிழன்பர் ஏ.சி.சச்சிதானந்தநாராயண் இந்தப் பீடுமிக்க தமிழன்பர் வரிசையில் தலைமையிடம் பெறுகிறார். சில திங்களுக்கு முன்னர் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில நாளிதழில் வெளிவந்த கட்டுரையில் திருக்குறளைக் குண்டகுண்ட ஆச்சார்யா என்ற சமண முனிவரே எழுதினார் என்று ஓர் அம்மையார் குறிப்பிட்டுள்ளார், அன்பர் சச்சிதானந்தம் அதனை மறுத்து, அதே நாளிதழில் தமிழ் இலக்கியத்தில் சமணர்களின் தொண்டினைத் திறம்பட விளக்கியமை பாராட்டத்தக்கது.

○ ○ ○

## தமிழக அரசின் உதவி

தமிழ்நாடு அரசு திருவனந்தபுரத்தில் உள்ள அனைத்துலக திராவிட மொழிகள் நிலையத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சத்து முப்பத்து ஆறாயிரம் ரூபாய் வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு உதவியளிக்கும் என்று சட்டமன்றத்தில் கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அறிவித்தார். அத்துடன் ஒட்டு மொத்தமான நாலரை லட்ச ரூபாய் உதவியும் கொடுப்பதாக முடிவாகி உள்ளது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் சுமார் 12 கோடிமக்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ள திராவிட மொழிகளைப் பேசுகிறார்கள் என்று தெரிகிறது. திராவிட மொழிகள் பற்றிய மாநாடு வருகிற ஜூன் திங்களில் மதுரையில் நடக்க இருக்கிறது.

○ ○ ○

## தமிழர் பேரவை

தமிழர் பேரவை என்ற அமைப்பு அண்மையில் நிறுவப்பட்டுள்ளது. அரசியல் கலப்பற்ற இயக்கம் என்று அறிமுகப் படுத்திக்கொள்ளும் இந்தப் பேரவையின் நோக்கம் பொது வாழ்க்கையினைத் தூய்மைப்படுத்துவதாம். மக்கள் நலனை மனத்திற் கொண்டு நீடித்த தொண்டினை இப்பேரவை செய்யும் என்று நம்புகிறோம். ஆட்சி பீடம் ஏறுவோரிடம் பண ஆசையும், பதவி வெறியும் நிலைத்து நிற்கின்றன. எண்ணெய், பருப்பு, அரிசி போன்ற இன்றியமையாப் பண்டங்களில் அதற்கென்றே சிறு இயந்திரங்கள் வைத்து ஈவிரக்கமின்றிக் கலப்படம் செய்வதும், பதுக்கி வைத்துக் கொள்ளை இலாபம் அடிப்பதும் ஒருசார் வணிகரின் நிரந்தரத் தொழிலாக உள்ளன. இவற்றையெல்லாம் களைந்து மக்கள் தொண்டு புரியவேண்டிய இப்பேரவையின் தலைவர் விருதுநகரைச் சார்ந்த வி. வி. இராமசாமி ஆவார். துணைத்தலைவர் கி.ஆ.பெ. விசுவநாதம். இவர் தொடங்கி நடத்திய தமிழகப்புலவர் குழு தற்போது என்னவாயிற்று என்று தெரிந்திலது. தமிழ்நாட்டில் ஆட்சி நடத்தும் எந்த அரசிடமும் இப்புதிய தமிழர்பேரவை மிகவும் உதவியாகவும், நட்பாகவும் இருந்து வருமாம். இக்கொள்கையினால் வேறு யாருக்கும் நன்மையில்லையாயினும், இந்தப் பேரவைக்கு நல்ல எதிர்காலம் இருக்கும்.

○ ○ ○

## இராமாயணவிழா

சென்ற ஏப்ரல்-2ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மத்தியப்பிரதேச மாநிலத்தில் சித்திரகூடம் என்ற இடத்தில் தேசிய இராமாயண விழா கொண்டாடப்பட்டது. விழாவினைத் தொடக்கி வைத்துச் சொற்பொழிவாற்றிய பிரதமர் மொரார்ஜி இராம-இராவணப் போர் வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் நடந்த போரினைச் சுட்டிக் காட்டுவதாகச் சொல்வது முறையன்று என்று குறிப்பிட்டார். இராமலீலாவின்போது இராவணனின் உருவப் பொம்

மையை எரிப்பது, சமுதாயத்தில் எந்தப் பிரிவினரின் மனத்தை யாவது புண்படுத்தினுல், அந்தநிகழ்ச்சியை நிறுத்திவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இராமாயணத்தில் அடங்கிய ஆன்மீகப் போராட்டத்தை ஆரிய—திராவிடப் போர் என்று பேசுவதும், அதன்மூலம் இந்திய ஒருமைப்பாட்டைக் குலைக்க முயற்சிகள் செய்வதும் வருந்தத்தக்கன என்று ஜெயப்பிரகாஷ்நாராயண் விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இராமாயணத்தை ஆரிய-திராவிடப்போர் என்று குறிப்பிட்டது பண்டித நேருதான் என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும். அவர் தம்மகளுக்கு எழுதிய கடிதங்களில் இக்குறிப்பு காணப்படுகிறது.

□ □ □

## ஆட்சி மொழி

டில்லி மக்களவையில் மார்ச்சுத் திங்கள் இரண்டாம் வாரத்தில் நாட்டுமொழி பற்றிய விவாதம் நடைபெற்றது. தருமபுரியைச் சார்ந்த இராமமூர்த்தி என்ற உறுப்பினர், நாடுமுழுவதும் நூற்றுக்கு அறுபது என்ற விழுக்காட்டில் இந்திமொழி பேசப்படுகிறது என்னும் பிரதமர் மொரார்ஜியின் கூற்றை மறுத்தார். 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்குப்படி 54 கோடி மக்களில், 16 கோடி மக்களே இந்தி மொழியினைப் பேசுகின்றனர். இதுவும் தனித்த ஒரு மொழி அன்று. ஏறத்தாழ நாற்பத்தேழு கிளைமொழிகளை ஒன்று சேர்த்தே இந்தி மொழி என்று அழைக்கின்றனர். இந்த நிலையில் மறைமுகமாக இந்தியைத் திணிக்க முயல்வது நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு விளைப்பதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து பேசிய தஞ்சை உறுப்பினர் எஸ். டி. சோமசுந்தரம் கனடாவில் ஆங்கிலமும், பிரெஞ்சும் தேசிய மொழிகளாக இருப்பது போன்று நம்நாட்டில் ஆங்கிலமும் இந்தியும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இந்தி பேசாத மக்கள் விரும்புகின்றவரை ஆங்கிலமும் அனைத்திந்திய மொழியாக நீடிக்கும் என்று பண்டிதநேரு அளித்த வாக்குறுதியும் நினைவுபடுத்தப்பட்டது.

□ □ □

## ஒப்பிலக்கியம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான நற்றமிழ் இலக்கியத்திற்கு முதலில் வந்தவை உரையும் விளக்கமும். அண்மைக் காலத்தே பிறந்தது இலக்கியத் திறனாய்வு. இப்படித் தொடர்ந்து வரும் இலக்கியக் கண்ணோட்டத்தில், இலக்கியங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதும் ஒரு புதியகலை. அமெரிக்காவில் இந்தியானா பல்கலைக் கழகத்தில் மேனாட்டு இலக்கியங்களை ஒப்பிடும் அரியபணி வேரூன்றி உள்ளது. தென்னகத்தில் மதுரைப் பல்கலைக் கழகம் இதற்கு முன்னோடியாக இருப்பது பெருமைக்குரியது. இந்த ஆண்டு மே திங்களில் பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடன் ஒப்பிலக்கிய வகுப்புகள் இங்கு நடைபெறுகின்றன. புரட்சிக் கவிஞன் பாரதியையும் அமெரிக்கக் கவிஞன் வால்ட் விட்மனையும் ஒப்பிட்டு அரியதோர் ஆய்வு செய்துள்ள டாக்டர். வி. சச்சிதாநந்தம் இக் கோடை வகுப்புகளின் இயக்குநர் ஆவார்.

□ □ □

## சங்கச் செய்திகள்

(1) தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் உயர்திரு டி. பி. எம். பெரியசுவாமி அவர்கள் 1977 -ஆம் ஆண்டு மே திங்களில் நிகழ்ந்த தமிழக சட்ட மன்றத் தேர்தலில் மதுரை மேற்குத் தொகுதியிலிருந்து பெருவாரியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

(2) மதுரை வழக்கறிஞரும், தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினருமான உயர்திரு. K.கந்தசாமி அவர்கள் ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்து தமிழக சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

(3) செந்தமிழ்க்கல்லூரியின் தாளாளரும், தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு உறுப்பினருமான உயர்திரு. வா. தனுக்கோடிபாண்டியன் அவர்கள் இராமனுதபுர மாவட்டத்தின் அரசு (குற்றஇயல்) வழக்குரைஞராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(4) மதுரை வழக்கறிஞரும் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினருமான உயர்திரு. மா. சங்கரபாண்டியன் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தின் செனட் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

(5) சென்ற ஆண்டு செப்டம்பர்த் திங்கள் எட்டாம் நாள் மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு மாண்புமிகு அமைச்சர்கள் திரு.கா.காளிமுத்து, திரு கா. ராசாமுகமது ஆகிய இருவரும் வருகை புரிந்தனர். மாட்சிமை பொருந்திய இராமனுதபுரத்து அரசர் ஆர்.எஸ். ராமநாதசேதுபதி அவர்கள் தலைமையில் வரவேற்பு அளிக்கப் பட்டது. தமிழ்ச்சங்கத்தின் தொண்டு, வளர்ச்சி ஆகியன பற்றி ஆர்வமுடன் உசாவிய அமைச்சர்கள், சங்க வளர்ச்சிக்குத் தமிழக அரசு தன்னுலியன்ற உதவிகளை அளிக்கும் என்று குறிப்பிட்டார்கள்.

(6) தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ.அரங்கநாயகம் அவர்கள் 13-9-77-அன்று தமிழ்ச்சங்கத்திற்கு வருகை தந்தார். செந்தமிழ்க்கல்லூரியின் ஆட்சிக்குழுத்தலைவர் திரு.மா. சங்கர பாண்டியன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த கூட்டத்தில் அமைச்சர் அவர்களுக்குச் சங்கச்செயலாளர் திரு டி. பி. எம். பெரியசுவாமி அவர்கள் பொன்னுடை போர்த்திப் பாராட்டினுர்கள்,

# உளங்கனிந்த நன்றி

சங்க இலக்கிய வளர்ச்சிக்கும், பழந்தமிழ் நாட்டின் வரலாற்று ஆராய்ச்சிக்கும் சிறந்து விளங்கும் "செந்தமிழ்" ஏட்டிற்கு மொழி இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக் கருத்துக்களை நன்முறையில் எழுத்தோவியமாகத் தந்துதவிய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியும் வணக்கங்களும் உரியன.

தனித்தமிழ் ஏடாகத் தரணியெங்கும் தமிழ் மணம் பரப்பி வரும் "செந்தமிழ் ஏட்டிற்கு" இந்நன்னாளில் தமிழ்ப் பண்பு நிறைந்த தமிழ் மக்கள் அனைவரும் "செந்தமிழ்" இதழ் உறுப்பினராகித் தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரியுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவண்

ஆசிரியர் குழு.

*Statement about Ownership and other Particulars*

| | |
|---|---|
| Place of Publication : | MADURAI TAMIL SANGAM<br>54, Tamil Sangam Road<br>Madurai – 625 001 |
| Periodicity of its Publication: | QUARTERLY<br>(March, June, September,<br>December) |
| Printer's Name: | T. Ramasamy |
| Nationality: | Indian |
| Address: | 12, North Masi Street<br>Madurai – 625 001 |
| Publisher's Name : | T.P.M. Periaswami, M.L.A. |
| Nationality : | Indian |
| Address : | Madurai Tamil Sangam<br>54, Tamil Sangam Road<br>Madurai – 625 001 |
| Editor's Name : | T.P.M. Periyaswami, M.L.A. |
| Nationality : | Indian |
| Address : | Madurai Tamil Sangam<br>54, Tamil Sangam Road<br>Madurai - 625 001 |

I, T.P.M. Periyaswami, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) *T.P.M. PERIYASWAMI*
*Publisher.*